# தென்மொழி

## என்றைக்கு எழுவாயோ ?

இன்றைக்கே எழாமல்,நீ என்றைக்குத்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
என்றைக்குக் காலமினி ஏற்றபடி
கனிந்துவரும், இந்நாள் போல?
குன்றைத்தூள் செய்கின்ற வல்லுணர்வை
உன்நெஞ்சில் குவிக்கும் வண்ணம்
என்றைக்குப் பாவேந்தன் இனியொருகால்
எழுந்துவந்தே எழுதித் தீர்ப்பான்?

இப்பொழுதே எழாமல்,நீ எப்பொழுது
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எப்பொழுது பெரியார்போல் இராப்பொழுதும்
பகற்பொழுதும் இளைப்பா றாமல்
முப்பொழுதும் முதுமையிலும் ஊரூராய்த்
தெருத்தெருவாய் முழங்கு கின்ற
ஒப்பரிய இன்னொருவர் இனிவந்தே
உனக்கென்று பேசித் தீர்ப்பார்?

(தொடர்ச்சி 1-ஆம் பக்க



விலை
75 கா

கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

# நமக்கு வந்த மடல்கள்.

**0: 372:** தென்மொழி தோன்றிய நாள் முதல் இன்று வரை உலகிற்குத் தமிழ் மொழியின் உயர்வுதனைக் காட்டுதற்கும், ஆரியத்தை அறவே வெட்டி வீழ்த்துதற்கும் தவறியதில்லை. தென்மொழி ஆசிரியரும், இந்நூற்றாண்டின் ஈடு இணையற்ற பாவலரும், இன்றைய தமிழ் இனத்திற்குத் தலைமை ஏற்கத் தகுதியுடையவரும், அதற்குரிய அறிவு, ஆற்றல், திட்டம் வகுக்கும் திறன், சிறந்த வினைப்பாடு அனைத்தும் ஒருங்கிணையப் பெற்ற வருமான திரு. பெருஞ்சித்திரன் அவர்கள் தமிழ்மொழி, இன விடுதலைக்கு வழிகாட்டுவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தனித்தமிழர் தமக்குள்ளே மாறுபட்ட தன்மையினால் தமிழ்ப் பெருநாடு அடைந்துள்ள தீமைகளைப் பாவலர் ஐயா அவர்கள், தென்மொழியில் பல இடங்களில் சுட்டிக்காட்டிய தோடன்றி "எந்தப் பகை களைந்தோம், எல்லாரும் உட்பகைத்தோம்" என்றார். இந்த உட்பகையைக் களைதற்கான பணியில் பாவலர் ஐயா அவர்கள் ஈடுபடுவதற்கு மாறாகத் தென்மொழியால் தனித்தமிழ் அன்பர்கள் சிலரை மறைமுகமாகத் தொடர்ந்து தாழ்த்தி எழுதுவது வருந்தத் தக்கது. இஃது அவரின் தகுதிக்கும், அறிவாற்றலுக்கும் வேண்டா ஒன்று. மேலும், சென்ற மாநாட்டின் பொழுது 'சில கூழாங்கற்கள் வைர ஒளிகாட்டி, அங்குக் கூடிய அன்பர்களின் மனங்களைக் குழப்பியடித்துக் கொள்கைக் கூறு போட்டதாகச்' சென்ற தென்மொழியில் கண்டு வியப்படைந்தேன். அது மிக மிகத் தவறான செய்தி. வேண்டுமென்றே யாரோ சில பார்ப்பனியக் கருத்துடையவர்கள் உட்பகையை வளர்ப்பதற்கு இது போன்ற உண்மைக்கு மாறான செய்திகளைப் பாவலர் ஐயா அவர்களிடம் தெரிவித்துள்ளார்கள் எனக் கருதுகிறேன். சென்ற மாநாட்டின் போது சிறை செய்யப் பட்டவர்களைத் தவிர, வெளியில் இருந்த தனித்தமிழ் அன்பர்கள், வெளியில் இருந்து கொண்டு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு இருந்தனரே அன்றி ஆக்கிவைத்த சோற்றுக்குப் பங்குக்கு வந்து படையல் போட்டுக் கொள்ளவோ, இலக்கு எண்ணிக்கையாகவோ யாரும் அங்கு வந்ததாகத் தெரியவில்லை.

எனவே பாவலர் ஐயா அவர்கள் தேவையற்றதை எழுதிக் காலத்தை வீணாக்காமல் சிதைந்து கிடக்கின்ற தனித்தமிழ் உணர்வுகளை ஒன்று சேர்க்கின்ற பணியில் ஈடுபடவேண்டும். தமிழக விடுதலை என்பது தனிப்பட்ட ஒரு சிலரால் மட்டும் கிடைப்பதன்று என்பது பாவலர் ஐயா அவர்கள் அறிந்த ஒன்றே. எனவே ஐயா அவர்கள் தமிழ் இன,மொழி உணர்வைப் பேச்சாலும், எழுத்தாலும் பிற செயற்பாட்டாலும் தமிழ்மக்களிடையே ஊட்டி வீழ்ச்சியுறு தமிழகத்தை எழுச்சி பெறச் செய்ய வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். —பெ. சு. அன்பரசன்–மதுரை-2.

**0: 373:** மாநாட்டு நிகழ்ச்சிச் சுருக்கம் தமிழனிடம் மண்டிக் கிடக்கும் மடமை அகற்றி நெடுதுயில் நீக்கி நெஞ்சுயர்த்திடச் செய்வதாக உள்ளது. "மொழிமறந்து கிடக்கும் இவனை விழிப்

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

இந்நொடியே எழாமல், நீ எந்நொடியில்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எந்நொடியும் செந்தமிழை வீழ்த்துதற்கே
எதிர்பார்க்கும் ஆரி யத்தை
அந்நொடியே இடுப்பொடிக்கும் மொழிவல்லார்
தேவநேயப் பாவா ணர்போல்
இந்நிலத்து வேறொருவர் இனிவந்தா
ஆய்ந்துண்மை எடுத்துச் சொல்வார்?

இக்காலே எழாமல், நீ எக்காலே
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எக்காலும், இனியொருகால் இந்நிலத்தை
இருவிழிபோல் காப்ப தற்கே
தக்கார் அண் ணாத்துரைபோல் எவர்வருவார்?
தமிழகத்தின் மேடை தோறும்
முக்காலும் தமிழ்காக்க எவர் முழக்கம்
செய்திடுவார், முனைந்து நின்றே!

இதுநேரம் எழாமல், நீ எதுநேரந்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எதுநேரம் எந்தமிழர் ஆட்சியினை
இருட்டடிக்க-என்றே பார்ப்பான்
அதுநேரம் பார்த்திருக்க, அயர்வின்றி
உழைக்கின்ற அருட்செல் வர்போல்
எதுநேரும் என்றாலும் இளைக்காத
நெஞ்சொன்று இனிமேல் கிட்டும்?

இன்றைக்கே நீ யெழுதல் இல்லையெனில்
இனியடுத்து வரப்போ கின்ற
என்றைக்கும் தமிழா, நீ எழப்போதல்
இல்லையென எண்ணிக் கொள்வாய்!
அன்றைக்குப் போனதடா நின்னுரிமை;
நின்பெருமை; அனைத்து வாழ்வும்!
என்றைக்குச் சிறப்பாயோ? நந்தமிழ்த்தாய்க்
குலகநிலை ஏற்று வாயோ?



# தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!


**சுவடி 11 ஓலை 1**

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

இரட்டை-மடங்கல் தி. பி. ௨௦௦௪ (சூலை–ஆக–1973)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1 தமிழகம்.


# ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்!-4



தமிழ்மொழிக்கு மிகவுழைத்தவரெனச் சொல்லப்பெறும் பர். உ. வே. சாமிநாதர், தமிழ்மொழியின் தனிமைச் சிறப்பைப் பலவிடங்களில் தாழ்த்தியுள்ளது கவனிக்கத் தக்கது. கழகநூற்பதிப்புகளுக்காக அவர் ஊரூராய் அலைந்ததும், அவற்றைத் திரட்டி ஆராய்ந்து அச்சிட்டதும் அவர் பெருமையை நன்றியுடன் நினைக்கப் போதுமான அரிய வினைப்பாடுகள் எனின், அந்நூல்களுலெல்லாம் ஆரிய நச்சுக் கருத்துகளைத் தக்கவிடத்தில் மறவாது வைத்துப் போனதும் இவரின் இயல்பான இனவுணர்வை மறவாதிருக்கச் செய்யும் நினைவாகும். தமிழ் மொழி மேல் இவர்க்கு ஒருவகைப் பற்று உளதென்றால், அஃது ஆரியத்தைக் கலப்பதற்கு ஏற்ற ஒரு கருவியாக உள்ளதெனும் மாற்றாந்தாய்ப்

பாசமே என்க. பரிமேலழகர் திருக்குறளை எவ்வாறு தம் இனக் கருத்துகளை ஊன்றுவதற்கு ஏற்ற ஒரு விளை நிலமாக எடுத்துக் கொண்டாரோ, அவ்வாறே உ. வே. சா. கழகப் பதிப்புகளைக் கைக் கொண்டார். இன்றியமையாத சொற்களையெல்லாம் வடமொழி யாகவே இவர் பயின்றுர். பண்புகள் அல்லது குணங்கள் என்று குறிப்பதால் நிறைவுருத இவர், குணவிசேடங்கள் என்று குறிப்ப தால் மனநிறைவுறுவார். மைசூர் நாடு என்று குறிக்காமல் மைஸூர் ஸம்ஸ்தானம் என்றே குறிப்பார். இன்னும், அரசு கட்டில் என்பதைச் சிங்காதனம் என்றும், அமைச்சு என்பதை மந்திரிவேலை என்றும், விண்மீன் என்பதை நக்ஷத்திரம் என்றும், மருத்துவம் என்பதை வைத்தியம் என்றும், வள்ளல் என்பதை உபகாரி என்றும், இளம் பருவம் என்பதை இளம்பிராயம் என்றும், படிகள் என்பதைப் பிரதிகள் என்றும், பாடவேறுபாடு என்பதைப் பிரதிபேதங்கள் என்றும், முற்றூட்டு என்பதை ஸர்வமானியம் என்றும், கல்வெட்டு என்பதைச் சிலாசாஸனம் என்றும், சான்று என்பதை ஆதாரம் என்றும், நகைகள் என்பதை ஆபரணங்கள் என்றும், கொடி என்பதைத் துவசம் என்றும், போர் என்பதை யுத்தம் என்றும், பயன்படுத்துதல் என்பதைப் பிரயோகங்கள் என்றும் பலவாறு வடசொற்களைப் பெய்து எழுதுவதில் இவர் பெருமகிழ்வுற்றதாகத் தெரிகின்றது.

அவ்வாறு தமிழ் மொழியோடு வடசொற்களைப் பெய்து எழுதுவ தால் வடமொழியாகிய சமசுக்கிருதத்தின் துணையின்றித் தமிழ் இயங்காது என்பது வலிவுறுத்தம் பெறல் வேண்டும் என்பது இவர் கொள்கையாக விருக்கலாம். இவர் இதனை, ஒரு கொள்கையாக வலிந்தே கையாண்டுள்ளார் என்பதற்குப், புறநானூற்றுப் பதிப்பின் உரையின் இயல்பு என்னும் பகுதியில் 'வடசொல்லாட்சி' என்னும் தலைப்பிட்டு, அப்புறநானூற்று உரையாசிரியரின் உட்கோளை இவர் கண்டு கொணடதாக எழுதும் பகுதியே அழுத்தமான சான்ருகும். அப்பகுதியில்,

"இவரது உரைநடை பெரும்பாலும் செந்தமிழ்ச்சொல் நிறைந்த தாக விருப்பினும் ஒரோவிடங்களில் சில தமிழ்ச் சொற்களுக்கு வடசொற்களைக் கொண்டு இவர் பொருளெழுதியுள்ளார். கடனென் பதற்குப் பிண்டோதகக்கிரியை யென்றும், மருந்தென்பதற்குப் பரிகாரம் என்றும், ஒளிறுமென்பதற்குப் பாடஞ் செய்யும் என்றும், அறமென்பதற்குத் தர்மம் என்றும், பூண்டென்பதற்குப் பரித் தென்றும். ஓம்புதல் என்பதற்குப் பரிகரித்தல் என்றும் கூறும் இடங் களையும் இவற்றைப் போன்ற பிறவற்றையும் காண்க"

—என்று எழுதியுள்ளார். புறநானூற்று உரையாசிரியர் கொண்டதாக இவர் குறிப்பிடும் அதே கொள்கையை இவரும் பின் பற்றியதற்குக் கரணியம், புறநானூற்று உரையாசிரியரையும் ஓர் ஆரியப்பார்ப்பனராகக் காட்டுதல் வேண்டும் என்பதோ, அவ்வாறு எழுதுவதுதான் சிறப்பு என்பதை உணர்த்தல் வேண்டும் என்பதோ வாகத்தான் இருக்க வேண்டும். மேலும் பண்டைப் புலவர்களிலோ, முற்றூட்டுப் பெற்ற சிற்றரசர்களிலோ ஆரியர்கள் இருப்பனராயின் அவர்களை மிகவும் சிறந்தவர்களாகக் குறிப்பது இவரின் இனப் பற்றையும், ஓரம் போகிய தன்மையையும் நன்கு காட்டுகின்றது. சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந் தாயன் என்னும் சிற்றரசனை, 'இவன் 'அந்தணதிலகன்' என்றும், 'கௌண்டின்னிய கோத்திரத்திற் பிறந்தோன்' என்றும் தேவையற்ற குறிப்புகளை எழுதி வைத்துள்ளார். பாடிய புலவர்கள் குறித்த ஏதானும் ஒரு சிறு குறிப்பைக் கொண்டே சிலரை இவரினத்த வராகக் கொண்டு மகிழும் சிற்றின்ப உணர்ச்சியும் இவர்க்கு இருந் திருக்கின்றது. கழகப் புலவர் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனாரை 'இவர் அந்தணரின் வேள்வித்தீயைப் பாராட்டிக் கூறியிருத்தலால் இவர் அந்தணராகக் கருதப்படுகிறார்' என்றும், கள்ளில் ஆத்திரை யனார் என்னும் புலவரை, 'ஆத்திரையன்-அத்திரிகுலத்தில் பிறந்தவர்; இவரது இப்பெயர் குடிப்பெயர்; இதனால் இவர் அந்தணராகக் கருதப்படுகிறார்' என்றும், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரை 'இவர் குலம் ஒருவகை வேதியர் குலமென்பது சிலர் கொள்கை' என்றும், வேம்பற்றூர்க்குமரனார் என்னும் புலவரைக் குறிப்பிடுங்கால், 'வேம்பற்றூரென்பது மதுரைக்குக் கிழக்கே உள்ளதோரூர்; வேம்பத்தூரென இக்காலத்து வழங்கும்; குலசேகரச் சதுர்வேதி மங்கலமென்றும் இதனுக்கு ஒரு பெயருண்டென்று சிலாசாசனத்தால் தெரிகிறது" என்னும் குறிப்பெழுதி, 'கடைச்சங்கப் புலவர் காலந் தொடங்கி இன்றுவரை அந்தணர்களே தமிழ்ப்புலவர் களாக இவ்வூரில் விளங்கியிருத்தல் கண்கூடாதலாலும், பெயராலும் இவர் அந்தணராகக் கருதப்படுகிறார்' என்றும், இன்னும் பலவாறும் இவர் குறிப்புகளைத் தம் இனச் சார்பாக எழுதிக் கொள்வது வழக்கம். மேலும், மதுரை வேளாசான் என்னும் புலவர் ஒருவர் எழுதிய புறப்பாடற் குறிப்பைக் கொண்டு, "ஒரு வேந்தனிடமிருந்து மற்றொரு வேந்தன்பால் அந்தணன் தூது செல்லுதற்குரியன் என்பது இவர் பாடலால் தெரிய வருகின்றது' -என்று தம் இனத்திற்கு அரசர்கள் கொடுத்ததும் கொடுக்க வேண்டிய துமான ஏற்றத்தையும் மனவேட்கையையும் இவர் வெளிப்படுத்தி யிருப்பதைப் பார்த்தால், கழக நூற்பதிப்பு என்னும் கல்தரையில்

இவர் தம் இனப்பதிவை எத்துணை ஆழமாகச் செதுக்கி வைத்துள்ளார் என்பது தெற்றெனப் புலப்படும்.

இனி, இவரைப் பின்பற்றித்தான் இவர் மாணுக்கர் கி. வ. சகந்நாதன் அவர்களும் அவரினும் மேலாக ஆழமாக இயங்கி வருகின்ருர். அவர் பேசப் புகும் சில கூட்டங்களில் முன்னுரையாக "என் குருநாதராகிய மகாமகோபாத்தியாய தாக்ஷிணுத்ய கலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் இட்ட பிச்சையால் சிறந்து விளங்கும் இத் தமிழ் மொழி"- என்னுந் தொடரைப் பயன்படுத்தி வருகின்ருர். ஆரியப் பார்ப்பனர்கள் தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் எத்துணை ஆழமாகத் தம் இனப்பெருமையை வேருன்ற வைத்துள்ளார்கள் என்பதை அறிந்தால், நாம் நம் தமிழ் மொழிக்கே உரித்தான சிறப்பியல்களை எத்துணை ஆயிரம் முறை சொன்னுலும் பிழையில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

ஆரிய நச்சுக் கருத்துகளை அவர்கள் நூல்களில் போன்றே அன்ருடம் அவர்கள் நடத்தும் நாளிதழ்களில் பல வகைகளிலும், பல துறைகளிலும் இன்னும் விடாப்பிடியாக நுழைத்து வருகின்றனர். தினமணி, சுதேசமித்திரன், விகடன், கல்கி, கலைமகள், கதிர், துக்ளக் முதலிய ஆரியக் கும்பல் இதழ்கள் தமிழ் மொழியையும், பண்பாட்டையும் திட்டமிட்டே அழித்து வருகின்றன.

'கல்வி வாய்ப்புகளை விரிவாக்க முடிவு'—என்பதை, 'கல்வி வசதிகளை விஸ்தரிக்க முடிவு'—என்றும்,

'கோவையில் வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது' — என்பதை, 'கோவையில் ஸ்டிரைக் வாபஸ்' என்றும்,

'மன்ஞர்குடியில் உழவர்கள் ஊர்வலம்'—என்பதை, 'மன்ஞர் குடியில் கிஸான் ஊர்வலம் என்றும்,

'முதல்வரிடம் வேண்டுகோள்'—என்பதை, முதல்வரிடம் 'மகஜர்' என்றும்,

'முசுலீம் லீக் செயற்குழுத் தீர்மானம்'—என்பதை, 'முஸ்லீம் லீக் காரியக் கமிட்டி தீர்மானம்' என்றும்,

'பாதுகாப்புத் துறை மறுப்பு'—என்பதை, 'பாதுகாப்பு இலாகா மறுப்பு என்றும்,

'மேட்டூர் நீர் மட்டம்'—என்பதை, 'மேட்டூர் ஜல மட்டம்' என்றும்,

'சரியாகக் கடைப்பிடிக்கவும்' என்பதைச், 'சரியாக அனுஷ்டிக்கவும்' என்றும்,

'ஆலைச்சிக்கல்' என்பதை 'ஆலைத் தகராறு' என்றும்,

'கொள்ளைக் கூட்டம் பிடிபட்டது' என்பதைக் 'கொள்ளைக் கோஷ்டி பிடிபட்டது' என்றும்,

—இன்னும் பலவாறும் வேண்டுமென்றே அவ்விதழ்கள் எழுது வதைப் பார்த்தால், தமிழ் மொழியை எவ்வகையானும் அழிப்பதும்; அதன் தனித்தன்மையையும் தூய்மையையும் கெடுத்து, அஃதை ஒரு புன்கலவை மொழி என்று ஆக்குவதுமே அவர்களுக்குத் தலையாய நோக்கம் என்று தெரியவில்லையா? தகராறு என்னும் சொல்லையோ, இலாகா, கமிட்டி, கிஸான் என்னும் சொற்களையோ சமசுக்கிருத நூல்களில் ஆரியப் பார்ப்பனர்கள் பயன்படுத்துவார்களா என்பதைச் சுப்பிரமணியப் பக்தவத்சலத் தமிழர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ்மொழியின் தனித்தன்மையை அழித்து, ஆரிய மொழியான சமசுக்கிருதத்திற்கு அடிமையாக்கி; அதன்வழித் தமிழினத்தை என்றென்றும் ஆரியத்திற்கு அடிமையாக்கி வைத்திருப்பதே அவர் களின் உள்ளக் கருத்து. என்பதைக்கூட உணராமல், தலைக்கொழுப்பு மண்டிய சுப்பிரமணியன்கள், தில்லிச் சப்பாத்திக்கும், ஆரிய வெள்ளைத் தோலுக்கும் அடிமையாகி, 'தனித்தமிழ் முயற்சி ஓர் அறியாமை முயற்சியே' என்று தம்மை எல்லாம் அறிந்தவர் போல் கருதிப் பேசிக்கொண்டிருக்கும் பேதைமையை என்னென்பது. வழக் கறிஞர் படிப்புப் படித்துவிட்டு நடுவணரசில் ஓர் அமைச்சனுகி விட்டால், உலகத்து அறிவெல்லாம் தன் மூளையிலேயே ஏறிவிட்டது என்று எண்ணித், தனக்குத் தொடர்பில்லாத் துறைகளிலும் வாய் வைத்துக் கருத்தறிவிக்கும அக் குயக்கொண்டான் தனத்தை இன்னும் எவ்வாறு சூடேறும்படி சுட்டிக் காட்டுவது என்பது நமக்கு விளங்க வில்லை.

பார்ப்பனர்கள் தமிழ்மொழி யழிவையே சமசுக்கிருத மொழியின் வளர்ச்சியாகக் கருதியிருக்கின்றுர்கள் என்பதை அவர்கள் இனம் வெளியிடுகின்ற இதழ்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு படியை எடுத்து ஒரு சேரத் தொகுத்துப் பார்த்தாலே போதும்; நன்கு விளங்கும். அடிமை உள்ளந் தவிர நடுநிலையான எந்த உள்ளமும் அச்சூழ்ச்சியை நன்கு உணர முடியும். (—தொடரும்.)

# பேராசிரியர் இலக்குவனுர் மறைவு தமிழர்க்குப் பேரிழப்பு!

தமிழ்ப் பேராசிரியர் பண்டாரகர் இலக்குவனுர், இவ் வாசிரியவுரை, அச்சாகிக் கொண்டிருக்கையில், மறைவுற்றுர் எனும் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சி யுற்றேம். அவரின் மறைவு தமிழ்மொழி, இனம், நாடு அனைத்திற்கும் பேரிழப்பாகும். அவரை யிழந்து கண்ணீர் வடிக்கும் நாட்டொடு நாங்களும் நெஞ்சங் கறைந்து கையற்றுத் துயருறுகின்றேம்.

—பெருஞ்சித்திரன்.

# அன்பர்கள் கவனிக்க!

(ஆசிரியர் அறிக்கை)

என்னை அளவிறந்து பாராட்டுவதில் சிலர் இன்பம் கொள்வதாகத் தெரிகின்றது. கூட்ட அறிக்கைகள் சிலவற்றிலும், நம் கொள்கை இதழ்கள் ஒன்றிரண்டிலும் என்னைச் சிலர் **'அறிஞர்'** என்றும் **'பேரறிஞர்'** என்றும **'பெரும் பேரறிஞர்'** என்றும் பலவாறு நான் வெட்கித் தலைகுனியும்படி மிகைப்படுத்தி எழுதுகின்றனர். இவ்வாறு பாராட்டுவதால் அவர்கள் ஒருவகை மகிழ்ச்சியடைகின்றார்கள் என்பது உண்மையாக விருக்குமானால், அப்பாராட்டால் நான் மிகவும் வருத்தப்படுவதையும் உண்மையென்று அவர்கள் ஒப்புக் கொளளுதல் வேண்டும். மற்றும் ஏற்கனவே என் வெளிப்பாடுகளில் பொறாமையும் என் வினைப்பாடுகளால் எரிச்சலும் அடைந்து, ஆற்றொணா மன உளைச்சலில் வருந்திக் கொண்டிருக்கும் ஒரு சிலர், இத்தகைய அன்பர்களின் பாராட்டுதலால், மேலும் மனவழுங்கலுக்கு உள்ளாகித் துயர்ப்பட்டுக் கொண்டிருக்கவும் நேரும். அவர்களை இனியும் மனப்புழுங்கலுக்கு உள்ளாக்குவதும் எனக்கு விருப்பமில்லை. நான் எடுத்துக் கொண்டுள்ள பெருமுயற்சிகளுக்கு அவர்களின் அந்த நிலை ஒரு வகையில் இடையூருகவும் அமைந்து விடும் என்று நான் அஞ்சுகின்றேன்.

மேலும், அறிவுநிலை எனபது அடைவதற்கு அத்துணை எளியதன்று. என் அறிவின்மேல் பலருக்கு வியப்பும் நம்பிக்கையும் இருக்கலாம். அந்நிலை அவர்களின் அறியாமையால் ஏற்பட்ட கோளாறேயன்றி, என் அறிவினுல் ஏற்பட்ட சிறப்பாக என்னுல் கருத முடியவில்லை. என் அறியாமை எனக்கே நன்கு புலனுகின்றது. அறிஞர் என ஒருவரைச் சொல்ல வேண்டுமானுல் அவர் அறியாமை ஒரு சிறிதுதானும் இல்லாதவராக இருத்தல் வேண்டும். கசக்கின்ற இனிப்பை நாம் இனிப்பென்று சொல்ல முடியாது. சிறிது கசப்புடையதாக இருந்தாலுமே அஃது இனிப்பாகாது. இனி பெரும் பகுதி கசப்புடையதாக இருப்பதை இனிப்பு என்று எப்படிச் சொல்ல முடியும்? மண்ணின் ஈரமே தண்ணீராகிவிட முடியாது. அதிலும் குழியுண்டு; குட்டையுண்டு; குளமுண்டு; கிணறுண்டு; ஏரியுண்டு; கடலுண்டு. குழியும், குட்டையும், குளமும் கடலாகுமோ? இனிக் கடலானுலும் அதுவே உலகமாகுமா? இவற்றை நன்கு எண்ணிப் பார்த்து, அறிவு நிலையிலும் வைத்துப் பொருத்திப் பார்க்க வேண்டுகின்றேன். ஒரு சிறுபகுதிஅறிவும் பெரும்பகுதி அறியாமையும், கொண்டவரை எவ்வாறு அறிஞராகக் கருத முடியும் என்று எனக்கு விளங்கவில்லை. ஒருதுறை எனினும் அத்துறையில் ஒரு சிறிதும் அறியாமையற்றவராக விருந்தாலன்றி ஒருவரை அறிஞன் என்று கொள்ள முடியாது. எத்துறையானுலும் அதில் முற்றக்கற்ற ஒருவரே **'அறிஞர்'** எனும் சிறப்புத் தகுதிக்குப் பொருந்துபவராகின்றார். அவ்வகையில் தமிழகத்தைப் பொறுத்த

மட்டில், திருவள்ளுவருக்குப் பின், பாவாணர் ஒருவரைத் தவிர வேறு எவரையும் எத்துறையிலும் அறிவு நிறைந்தவராக என்ஞல் காண முடியவில்லை. இவ்விருவரும் தாம்பற்றிக் கொண்ட துறைக ளில் மிகவும் அஃகி யகன்ற அறிவுடையவர்கள். ஒரு துறையாயினும் அத்துறையில் கற்றுத்துறை போகிய முற்றறிவாளர்கள். இந்த என் கருத்து மிகப் பலருக்கு வருத்தமாகவும் ஏளனமாகவும் கூட இருக்க லாம். ஆனல் அவர்களின அத்தகைய மனநிலைகளே என் கருததை வலியுறுத்துவதற்கு மிகப்பொருந்திய சான்ருகும். ஏனெனில் அறிவுள்ளவர் ஒருவர்க்கு அத்தகைய மனநிலைகள் துளியும் இருப்ப தில்லை. எனவே அம் மனநிலைகள் இருக்கின்ற ஒருவர் அறிவையோ அறிருரையோ கண்டு கொள்ள முடியாது. அத்தகையோர் சிறிய அறிவு நிலைகளைக் கண்ட மட்டிலேயே பேரறிவென்று மயங்கி வியக்கின்ற பேரறியாமை படைத்தவர்களே!

இனி, என்னைக் கூட்டத்திற்கு அழைப்பவர்கள் எந்நிலையிலும் இத்தகைய போலிப் புகழுரைகளை என் பெயருக்கு முன்ஞல் போடுதலோ என் முன்ஞல் கூறுதலோ கூடாது. அத்தகைய ‘அறிக்கைகள்’ ‘அளப்புகள்’ உள்ள கூட்டங்களுக்கு நான் இனி வருதல் இயலாது. பொதுமக்கள் அறிதல் பொருட்டேனும் என்னை அவ்வாறு சிறப்புப் படுத்தியாகல் வேண்டும், என்று நேரில் என்னிடம் விளக்கங் கூறினர் சிலர். என்னையறியாத பொதுமக்களை என் பேச்சைக் கேட்க வருவிக்க வேறுவகை விளக்கங்களை அவர்கள் தருதற்கு மாருக, என்னை அவமதிக்கச் செய்யும் இத்தகைய பட்டங் களால் என் பேச்சை அவர்கள் கேட்கும்படி செய்துவிட முடியாது. கூட்டத்தைக் கூட்டுவது மட்டுமே அவர்கள் வேலை; பேச்சை இறுதி வரை இருந்து கேட்கச் செய்வது என் வேலை. அதற்காக அவர்கள் கவலைப்படல் வேண்டாம்.

மேலும், கூட்டங்களில் எனக்கு வாழ்த்திதழ் படித்துக் கொடுப் பதையும், மாலைகளிடுவதையும் நான் அறவே விரும்பவில்லை. அதற்கு மாருக, அவற்றுக்குச் செலவாகும் காசை அன்பளிப்பாகக் கொடுத்தாலும், நான் அதை என் கொள்கைகளை வெளியிடு வதற்காகப் பயன்படுத்த முடியும். இன்னும், உணவைக் கூட தனிப்பட்ட அன்பர் சிலரின் வீடுகளில் ஏற்பாடு செய்வதையும் நான் விரும்பவில்லை. பொது உணவகங்களில் உள்ளவற்றில் என் உணர்வுக்கும், உடலுக்கும் ஏற்ற உணவையே (என்னைக் கேட்டுக் கொண்டு) அவர்கள் ஏற்பாடு செய்தால் போதும். சில விடங்களில் பழங்களை மட்டும் உண்டு விட்டு என்ஞல் இருக்க முடியும். எனவே என்னைக் கூட்டங்களுக்கு அழைக்கும் அன்பர்கள் இவற்றையெல்லாம் புறக்கணிக்காமல் நன்கு கருதிப் பார்த்து, அவற்றின்படி நடக்க வேண்டிக் கொள்கின்றேன். அன்பன்,

—பெருஞ்சித்திரன்

சென்ற விதழ்த் தொடர்ச்சி:

# தென்மொழிக் கொள்கை
## (தமிழகப் பிரிவினை)

# 2-ஆவது மாநாடு-மதுரை.
### (நிகழ்ச்சிச் சுருக்கம்)

"எப்படியும் நாங்கள் கொடுத்த இசைவுகள் திரும்பப்பெறப் படுகின்றன; ஊர்வலமும் மாநாடும் தடைசெய்யப்படுகின்றன; நீங்கள் மீறி ஊர்வலம் நடத்தினால் நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார், அதிகாரி. "அஃது உங்கள் கடமை. அப்படித் தடை செய்யப் பெற்றதாக வாயால் சொன்னால் போதாது; எழுதிக் கொடுத்து விடுங்கள்" என்றார் அமைப்பாளர். உடனே தொலைபேசி வழி அலுவலக எழுத்தர் வரவழைக்கப் பெற்றார். இசைவு நீக்கக் கட்டளை அவ்விடத்திலேயே எழுதப் பெற்று, முத்திரையிடப் பெற்றுக் கைகளில் வழங்கப் பெற்றது. அதன்பின் அமைப்பாளர் ஊர்வலத்தினர்க்குச் செய்தியைத் தெரிவித்து, "இக்கால் தடை மீறப்படும்" என்று கூறி முன்னே சென்றார். உடனே அதிகாரிகள் "நாங்கள் உங்களைத் தளைப்(கைது) படுத்துகிறோம்" என்றனர். அதன் பின்னர் காவல் வண்டிகள் வந்தன. மொத்தக் கூட்டமும் உரத்த கொள்கை முழக்கத் துடனும் ஆவலுடனும் வண்டிகளில் ஏறியது. மிகப்பலரைக் காவலர்களே ஏற விடாமல் தடுத்து விரட்டியடித்தனர். விடுதலை மறவர்களை ஏற்றிக் கொண்டு வண்டிகள் குற்றப் பிரிவுக் காவல் நிலையத்தை நோக்கி விரைந்தன. அப்பொழுது மணி காலை 10-45 இருக்கும். காவல் வண்டிகள் சென்ற வழியெல்லாம் உள்ளிருந்த தொண்டர்கள் தொடர்ந்து விடுதலை முழக்கங்களை எழுப்பிக் கொண்டே சென்றனர். உணர்வின் கொந்தளிப்பால் அவர்களின் குரல்வளைகள் முறுக்கமேறி, முழக்கங்களுக்குச் சூடேற்றின.

காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்ற அனைவரும் காவல் நிலையத் தாழ்வாரத்தில் அமர்த்தப் பெற்றனர். அதன்பின்னரும் மறவர்கள் குழுக்குழுவாகப் பிரிந்து, மாறிமாறி விடுதலை முழக்கங்களைத் தொடர்ந்து முழக்கியவண்ண மிருந்தனர். காவல் நிலையம் அதிர்ந்தது. காவலர்களும் காவல் அதிகாரிகளும் செய்வதறியாது திகைத்தனர். காவல் நிலையத்திற்கு வெளியில் தெருவில் போவாரும்

வருவாரும் உள்ளிருந்து வரும் முழக்கங்களைக் கேட்டுக் குழுமி நின்று மறவர்களின் செயல்களை வியந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

பின்பு அங்கேயே மாநாடு தொடங்கலாம் என அமைப்பாளர் அறிவித்தார். அன்பர்கள் அனைவரும் அமைதியுடன் ஒருபுறமாக வந்து அமர்ந்து கொண்டனர். தொடக்கத்தில் பெரும்பகல்லா (நீலமலை) நா. இளமாறன் அவர்கள் தாமே இயற்றிய விடுதலைப் பாடல்களை உரத்த குரலுடனும் எடுப்பான இசையுடனும் விறுணர் வுடனும் பாடிக் காவல் நிலையத்தையே அமைதிப்படுத்தினர். முதலமைச்சரின் மதுரை வரவுக்காகவும், திரைப்பட நடிகர் இராமச் சந்திரனின் வரவுக்காகவும் ஏற்கனவே காவலர்கள் வெளியூர்களினின் றெல்லாம் வரவழைக்கப் பெற்றுக் காவல் நிலையத்தில் அடைந்து கிடந்தனர். அவர்கள் அனைவர்க்கும் காவல் நிலையத்தில் நடந்த விடுதலை மாநாட்டு நிகழ்ச்சிகள் மிகவும் மகிழ்ச்சியும் உணர்ச்சியும் தருவதாக விருந்தன. இளமாறனின் விடுதலைப் பாடல்களைக் கேட்டு அவர்கள் தங்களையே மறந்திருந்தனர். நம் அன்பர்களும் ஊக்கமும் உணர்வும் பெருகத் துணிவுடன் அமர்ந்திருந்தனர்.

விடுதலைப் பாடல்களுக்குப்பின் திருவாளன்மார் பாவிசைக்கோ (வெங்காலூர்), சி இராசாங்கம் (தஞ்சை), அ. மு. சம்பந்தம் (வழக்குரைஞர்–திருச்சி), அறவாழி (வெங்காலூர்), இராவணன் (கூடலூர்–மதுரை), தமிழநம்பி (திருக்கோவிலூர்–தெ ஆ.), ந. அரணமுறுவல் (மஞ்சப்புத்தூர்–தெ.ஆ.), பொற்செழியன் (வெங்காலூர்) ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அமைப்பாளர் பெருஞ்சித்திரனுர் அனைவர் பேச்சுகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். இடையில் வந்திருந்தவர்களின் பெயர்களையும் முகவரிகளையும் பதிந்து கொண்டிருந்த காவல் அதிகாரிகளிடம் போய்க் கவனித்துக் கொண்டிருந்தார். பேச்சு தொடர்ந்தது.

முதலில் பேசிய திரு. பாவிசைக்கோ, இவ்வியக்கம் தோன்றிச் சில ஆண்டுகள் ஆகிவிட்டதென்றும், பெரியாரை விட்டு அண்ணாத்துரை பிரிந்திருக்காமலும், பிரிந்தபின்பு இந்தியை எதிர்த்த மாணவர்களை வலக்காரமாக அடக்காமலும் இருந்திருந்தால் விடுதலை இயக்கம் நன்ருக வளர்ந்திருக்கும் என்றும், பெரியாரால் விடுதலை வாங்கித்தர இயலாதென்றும், மாநாடு நடத்துவதில் தமக்கு

நம்பிக்கை இல்லை என்றும், அதனால்தான் தாம் முன்பு நடந்த (திருச்சி) மாநாட்டிற்கு வரவில்லையென்றும், உணர்வு பெறப் பெருஞ்சித்திரனாரை நம்பிக்கொண்டிருக்கக் கூடாதென்றும், அவர் செத்தாரா இருக்கின்றாரா என்றுகூடக் கவனிக்கவும் கவலைப்படவும் வேண்டியதில்லையென்றும், அவரவரே தனித்தனியாகச் செயல்பட வேண்டுமென்றும்; மறைமுகமாகத் திட்டங்கள் தீட்டிக் கொள்ள வேண்டுமென்றும்; தம்மிடம் உள்ள திட்டங்களைத் தெரிய விரும்புவார் முறையோடு அணுகினால் தெரிந்து கொள்ளலாம் என்றும்; இப்போதைக்கு அரசினர் அலுவலில் இருப்போரெல்லாம் சிறைப்பட்டுத் துன்பப்படுவதில் பயனில்லை என்றும்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு நடுவணரசுத் துறையில் ஊடுருவித் தம்மை நிலைப்படுத்திக் கொண்டு, அதன்பின் வினையாற்ற வேண்டும் என்றும்; தலைவர் என்று யாரும் இருக்கக் கூடாதென்றும் பேசினார்.

திரு. இராசாங்கம் பேசுகையில் தமிழகம் எவ்வாறேனும் விடுதலை பெறவேண்டுமென்றும்; தாம் அவ் வினைப்பாட்டிற்குத் துணைசெய்ய உறுதியுடன் இருப்பதாகவும் சொன்னார்.

வழக்குரைஞர் திரு. அ. மு. சம்பந்தம் தாம் தி.மு.க. வைச் சேர்ந்தவரென்றும்; மிகுந்த விடுதலை உணர்வுடன் இருப்பதாகவும்; ஏற்கனவே இதுபோன்ற செயல்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

திரு. அறவாழி பேசுகையில், தமிழினத்தை வீழ்த்துவதில் குறியாயிருக்கும் துக்ளக் 'சோ'வுக்குச் செருப்புகளைப் பரிசாக அனுப்ப வேண்டும் என்றும்; கச்சத்தீவுப் புலனத்தில் இந்திரா அம்மையார் நடந்து கொண்டதைக் கண்டித்தும், ஆனால் கச்சத்தீவை இலங்கையுடன் சேர்த்துவிட்டால் 'இலங்கைத் தமிழர்களே' முதலில் தனிநாடு வாங்கி நமக்கு வழிகாட்டுவார்களென்றும் கூறினார்.

திரு. இராவணன் பேசுகையில் இளமையிலிருந்தே தாம் பார்ப்பனரால் நசுக்கப் பெற்றது பற்றிக் குறிப்பிட்டு, அவர்களை வன்முறையில்தான் ஒழிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திரு. தமிழநம்பி உரையாற்றுகையில் திரு. பாவிசைக்கோ நடைமுறைக்கு ஒவ்வாமல் நம்முடைய ஒற்றுமையைக் குலைக்கும்

கருத்துகளைக் கூறுவதாகவும்; ஒழுங்கு படுத்தப் பெற்ற இயக்கம் வேண்டுமானால் ஒரு தலைவர் தேவை என்றும், நாம் அவருக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டும் என்றும், அவரவர் விருப்பப்படி இயங்குவதால் எவ்வகைப் பயனும் விளையாதென்றும், பாவிசைக்கோ ஏதோ தம்மிடம் உள்ளதாகக் குறிப்பிட்ட திட்டத்தை வெளிப் படையாக நம்மிடமேனும் சொல்லட்டும் என்றும், ஒருவேளை பிறர் செய்யும் எல்லா வினைப்பாடுகளையும் முறியடிப்பதே அவர் திட்டமாக இருக்கக் கூடுமென்றும் குறிப்பிட்டார்.

திரு. அரணமுறுவல் விடுதலை அடைய வேண்டிய இன்றி யமையாமை பற்றியும், அதற்கென அனைவரும் இணைந்து செய்யும் வினைப்பாடுகள் பற்றியும் கூறினார்.

திரு. பொற்செழியன் உரையாற்றுகையில் ஐயா பெருஞ் சித்திரனார் அவர்கள் காட்டும் வழியில் நடக்கத் தாம் எப்பொழுதும் அணியமாக இருப்பதாகவும், இயக்கத்திற்குத் தலைமை தேவை என்றும் வலியுறுத்திப் பேசினார்.

அதன் பின்னர் திரு. அரிமா மகிழ்கோவும் (புதுவை) திரு. பொதிய வெற்பனும் (குடந்தை) ஒன்றிரண்டு இயக்கப் பாடல்களைப் பாடினார்கள். இத்துடன் காலை மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

காவல் துணை ஆய்வாளர் வந்திருந்தவர்களின் பெயர்ப்பட்டியலை இன்னும் எடுத்துக் கொண்டிருந்தார். ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்களும் அதற்குத் துணைசெய்து கொண்டிருந்தார்கள். தென்மொழிக் குடும்ப உறுப்பினர் எல்லாருடைய பெயர்களும் பதியப்பெற்றன. ஆசிரியர் அவர்களின் தந்தையாரும் (சேலம்) மாநாட்டுக்காக வந்திருந்தார்.

புதுவையில் இருந்தபொழுது பாவேந்தர் பாரதிதாசனுர்க்குப் பல வகைகளில் துணை நின்றவரும், அவர்மேல் ஆராக் காதல் கொண்டவரும், இக்கால் அப்சரா உணவு விடுதிக்கு இனிப்புச் செய்து கொடுப்பவருமாகிய திரு. மதன்மோகன் சேட் என்பாரும், ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்களின்மேல் வைத்த அளவிறந்த அன்பினாலும் மதிப்பினாலும் தாமும் மாநாட்டு ஊர்வலத்தில் கலந்து

கொண்டு தளைப்படுத்தப் பெற்று, மகிழ்ச்சியுடன் இருந்தார் என்பது, குறிப்பிடத்தக்கது. அவர்தாமும் 'தமிழ்நாடு தமிழர்க்கே என்று முழக்கமிட்டதும், தம்மை ஒரு வடநாட்டார் என்று கூறுது, தாமும் தமிழரே என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறியதும், ஆசிரியர் அவர்களை வாய் நிறைந்த அன்புடன் 'அண்ணு' 'அண்ணு' என்று அடிக்கடி அழைத்து வளைய வளைய வந்ததும், தென்மொழிக் குடும்பத்தாரிடமும் மற்ற தமிழன்பர்களிடமும் அவர் பாசத்தோடு பழகியதும் அவர் தமிழராகவே மாறிவிட்டாரோ என்று எண்ணி மகிழச் செய்தன.

பெயர்ப் பட்டியல் ஒருவாறு எடுக்கப் பெற்றது. மொத்தம் தொண்ணூற்றிரண்டு பெயர்கள் பதிவாகியிருந்தனர். உள் ளிருந்தவர்களைக் கண்காணிக்க ஐந்தாறு இரும்புத்தலைக் காவலர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். இருப்பினும் தளைப்படுத்தப்பெற்ற அன்பர்கள் சிலர் தேநீர் அருந்தவென்றும், காலகம் (சோடா) குடிக்க வென்றும் அடிக்கடி காவல் நிலையத்தின் முன்புறக் கடைகளுக்குப் போவதும் வருவதுமாக விருந்தனர்.

பிற்பகல் இரண்டரைமணி யளவில் காவல் அதிகாரிகளால் அன்பர்களுக்கு எலுமிச்சை, தயிர் உணவுப் பொட்டலங்கள் வருவித்து வழங்கப் பெற்றன. அன்பர்கள் அனைவரும் அவற்றை உண்டு டசியாறினர். உணவுக்குப் பின்னர், முன்பதிந்த 92 பெயர் களின் உடல் அடையாளங்களும், இரண்டு உறவினர் பெயர்களும் பதிய வேண்டி, காவல் அதிகாரிகள் மீண்டும் வரிசைப்படி அன்பர்களை அழைத்தனர். அக்கால் முன்பு பதிந்தவர்களுள் பன்னிருவர் இல்லாமலிருந்தனர். காவலர்களும் முன்னணி அன்பர்கள் பலரும் பலமுறை கூவியழைத்தும் தேடியும் அப்பன்னிருவரையும் காணமுடியவில்லை. அவர்கள் ஒருகால் நழுவியிருக்கலாம். அல்லது அக்கால் வெளியில் சென்றிருக்கலாம். ஆனால் அவர்கள் அன்று மாலை வரை திரும்பவே இல்லை. இங்கு அன்பர்கள் ஒன்றினை நினைவில் வைத்துக் கொள்ளுதல் எல்லாருக்கும் நல்லது.

பொதுத் தொண்டில் பலவகை உண்டு. நோகாமல் நோன்பு கும்பிடுவது போல், பேச்சாலும் எழுத்தாலும் இவ்வுலகத்தையே மாற்றியமைப்பது போல் வீறுர்ப்புக்காட்டுவது ஒருவகை. செயலுக்கு இறங்கினாலும் காலிலோ கையிலோ ஒரு சிராய்ப்புக்கூட இல்லாமல்

மீண்டுவிட வேண்டும் என்ற தன்மையில் ஈடுபடுவது ஒருவகை. தன் வேலைக்கோ பிழைப்புக்கோ குந்தகம் வராமல் ஏதோ சில பெருமைகளுக்காக எந்தவகை ஆரவாரங்களையும் செய்யத்துணிந்து விடுவது ஒருவகை. இனி, எந்த நிலையிலும் என்ன சூழலிலும் எதிர்வரும் விளைவுகளைப்பாராமல் தான் கொண்ட கொள்கைக்காகத் தன்னை முழுமையாக ஒப்புவித்து விடுவது ஒருவகை. இவ்வகைகளில் இறுதி வகையினர்தாம் எந்த வினைக்கும் தகுதியுடையவர். குறிப்பாக விடுதலை வரலாறுகள் இப்படிப்பட்டவர்களால்தாம் எழுதப் பெறுகின்றன.

மதுரை மாநாட்டு ஊர்வலத்தில் கலந்து கொண்ட அன்பர்களில் இறுதி வகையினர் மிகுதியும் இல்லை எனினும் ஓரளவு துணிவுள்ளவர்களாக இருப்பார்கள் என்றுதான் நாம் அனைவரும் கருதியிருந்தோம். அப்படிப்பட்டவர்கள்தாம் அதில் கலந்து கொண்டிருக்க வேண்டும். இவர்களன்றி 'நானும் விடுதலை வீரன்தான் எனக்கும் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று முதலியவை மிகுதியும் உண்டு' என்று பெருமையடித்துக் கொள்பவர்களும் கூட அங்கு வந்துவிட்டார்கள் என்றே கருத வேண்டியிருந்தது. அத்தகையவர்கள் எந்தக் கட்சியிலும் உண்டு. இன்னுஞ் சொன்னால், தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சியிலும் இருக்கின்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களும் அப்படிப்பட்டவர்களே! இவர்களை வைத்துக் கொண்டுதான் எந்தக் கட்சியாலும் எந்தவகை வினைப்பாட்டையும் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. அண்ணா அவர்கள் திராவிடநாட்டுப் பிரிவினையைக் கைநெகிழவிட்டதற்கும், பெரியார் அவர்கள் தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்தைத் தொடங்காமல் வெறும் இராமர் சீதைகளை வைத்துக் கொண்டு கூட்டங்களை மட்டும் நடத்திக் கொண்டிருப்பதற்கும், தி.மு.க. தன்னாட்சி என்று மழுப்பிக் கொண்டிருப்பதற்கும் இவ்வகை உறுப்பினர்களின் தக்கை நிலைகள்தாம் அடிப்படைக் கரணியங்கள். ஆனாலும் தென்மொழி மறவர்களில் இப்படிப்பட்டவர்களைப் பெரும்பாலும் நாம் எதிர்பார்க்கவில்லை.

தென்மொழி ஈடுபாடுடையவர்கள் என்றாலே அவர்களுக்கு ஒரு தனி நிலை உண்டு. அவர்கள் உறுதியான கொள்கைப் பிடித்தம் உடையவர்களாக இருப்பார்கள்; தெளிந்த அறிவுணர்வுடையவர்களாக இருப்பார்கள்; செயலில் துணிவும். முனைப்பும்

உடையவர்கள் அவர்கள்; பொருள்நிலைத் தொல்லைகளால் சிற்சில நேரங்களில், அவர்கள் சிறிது சோர்வடைந்திருந்தாலும், தங்களைத் தாங்களே தூக்கி நிறுத்திக் கொள்ளும் தன்னுற்றல் உடையவர்கள், தென்மொழி மறவர்கள். எனவேதான் பொதுவுடைமைக் கொள்கையினர் தம் கட்சிக்காக வீசும் வலைகளைத் தென்மொழி வயல்களில் வீசுகின்றனர்.

முன்பு தீவிரத் தென்மொழி ஈடுபாடுடையவர்களாக விருந்தவர்களில் சிலர் அல்லது பலர் இக்கால் பொதுவுடைமை யியக்கங்களில் ஈடுபாடுடையவர்களாக இருப்பதை நாம் பார்க்கத்தான் செய்கின்றோம். அவர்கள் அவ்வாறு போனதற்குத் தென்மொழிக் கொள்கையில் உள்ள குறைபாடு கரணியமன்று; பொதுவுடைமைக் கொள்கையில் உள்ள கவர்ச்சியே கரணியமாகும். தென்மொழி வயலில் எருவாக வேண்டிய நிலையை அவர்கள் விரும்பாது, பொதுவுடைமை வயலில் பயிராகத் திகழும் நிலையை அவர்கள் வரவேற்கின்றார்கள். மற்றப்படி உலக அறிவெல்லாம் அவர்கள் மூளைகளில் வந்துவிட்ட தென்றோ, இருக்கின்ற அறிவெல்லாம் நம் மூளைகளினின்று போய்விட்டதென்றோ எவரும் தவருக நினைத்துக் கொள்ள வேண்டா.

ஆரவாரத்தை விரும்புவர்கள் அறிஞர்களிலும் உண்டு; அறிவற்றவர்களிலும் உண்டு. இன்னுஞ் சொன்னுல் அறிவியலறிஞர்களிலேயே போலிகள் உளர். போலி நிலைகள் எங்கும் உண்டு. தென்மொழி இயக்கமும் அதற்கு விலக்கில்லை. எனவேதான் மாநாடு தொடங்குவதற்கு முன் வீரதீரம் பேசியவர்கள் ஊர்வலம் தொடங்குகையில் கொஞ்சம் மனந்தொய்ந்து காணப்பட்டனர். அவர்கள் காவலர்கள் கூட்டத்தை வளைத்த உடனேயே தப்பி விட்டனர். இனி, ஊர்வலம் தொடங்குகையில் வீரூர்ப்புக் காட்டியவர் சிலர் காவலர்கள் வந்தவுடன் மனம் நெகிழ்ந்து போயினர். அவர்கள்தாம் தளைப்பட்டவுடன் காவல் நிலையத்தில் கழன்று கொண்டவர்கள். அவர்கள் எத்தனையோ கரணியங்களைச் சொல்லலாம். அக் கரணியங்களை அவர்கள் முன்பே கருதாமல் ஊர்வலத்திற்கு வந்திருந்து, நம்கூட்டத்திலும் அத்தகையோர் உளர் என்று காட்டி இழிவு தேடித் தந்திருக்க வேண்டா என்பதே நாம் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்வது. இனி, அத்தகையவர்களை நாம் முன்பே இனங்கண்டு கொள்ள முடியாது. "எனைவகையான் தேறியக் கண்ணும், வினை

வகையான் வேருகும் மாந்தர் 'சிலர்' இல்லை, 'பலர்'—என்பது திருக்குறளின் தெளிவுரை. ஆனாலும் நாம் அவர்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை. அவர்களை வலிவற்றவர்கள் என்றோ தெளிவற்றவர்கள் என்றோ கருதவேண்டுவதும் இல்லை. அவர்கள் ஒருவகையினர்; அத்தகையினர் என்றும் நம்மோடு நாமாகக் கலந்து இருந்து கொண்டுதான் இருப்பர்; அவர்களை விலக்க முடியாது. வேண்டுமானால் சில பொறுப்புகளை அவர்களிடம் ஒப்படைக்காமல் நாம் தப்பித்துக் கொள்ள முடியும். அந்த நிலைகளை இம்மாநாட்டு நிலைகள் பலருக்கும் உணர்த்தியிருக்க முடியும் என்றே நாம கருதுகின்றோம்.

மீண்டும் சொல்கின்றோம் நாட்டு விடுதலை முயற்சிகள் என்பது எளிதன்று; உயிர் துறக்கும் முயற்சியாகும். ஈக வரலாற்றின் இறுதிப் படலமே விடுதலைப்படலம். கோழைகள் விடுதலை வரலாற்றை என்றும் எழுதியதில்லை; எழுதவும் முடியாது. துணிவு; துணிவு; துணிவு! அதுதான் விடுதலை இயக்கத்தின் கொள்கை மந்திரம். இதை நன்கு விளங்கிக் கொண்டவர்களைப் பொறுக்குவதற்குத்தான் திருச்சி மாநாட்டில் மூன்று கட்டத் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

இனி, அன்று இறுதியாகப் பதியப்பெற்ற எண்பது ஊர்வல மறவர்களின் பெயர்களும், ஊர்களும் வருமாறு: (தொடரும்)

---


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

| | | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | உருபா | 3-00 | 4-50 | 6-00 |
| தனியிதழ் | ,, | 0-25 | 0-35 | 0-50 |

(அரையாண்டுக்கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# தமிழரின் தனித்தன்மை.

(பிரித்தானிய மொழிநூலறிஞரின் தெளிவுரை)

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு"

கூறுபவர் நாமல்லம்! இங்கிலாந்து நாட்டின் எடின்பரோப் பல்கலைக் கழக மொழிநூல் ஆராய்ச்சியாளர் பர். ஆசர் அசார்டு (DR. R. C. ASHER HAZARDS).

இந்தியா, பாக்கித்தான், திருவிலங்கை நாடுகளுக்கான அரையக் கழகத்தின் (Royal Society) தெற்காசிய ஆய்விதழில் 'திராவிடரின்' தனித்தன்மை 'உண்மையா, புனைவா?' என்ற தலைப்பில் ஆசர் கூறுகிறார்.

இந்திய ஒன்றியத்தை உருவாக்கும் நாட்டினங்கள் தனித் தன்மை உடையவெனினும், ஏனையவை அனைத்தையும் விடத் தமிழினமே மிகுந்த தனித் தன்மை உடையதாகும்.

தமிழ்ப் பண்பாட்டின் முதுபழந் தொன்மையும், ஆரியப் பண்பாட்டுச் சார்பற்ற அதன் உண்மையும், இந்திய நாகரிக ஆக்கத் தின் வேறு எந்தக் கூறினின்றும் தமிழினத்தின் பங்கு வேறுபட்ட தாகும் எனச் சுட்டுகிறது.

தமிழ், கன்னடம், மலையாளம், ஆந்திரம் ஆகிய பகுதிகளைக் கொண்ட தனித்திராவிட நாட்டுக் கொள்கை, தமிழகத்தைத் தவிர்த்த பிறவிடங்களில் சிறப்புப் பெறாததின் காரணியத்தைப் பகுத்தாயும் ஆசர் கூறுகிறார்:

"வடக்கின் வல்லாண்மையிலிருந்து தொடர்ந்து விலகி நின்ற வரலாறு தெலுங்கு நாட்டுக்கோ, கன்னட நாட்டுக்கோ கிடையாது. சேரலத்தைப் பொறுத்த வரை, மலையாளம் தன்னை வளப்படுத்திக் கொள்ள எம்மொழியிலிருந்தும் கடன் கொள்ள எப்பொழுதும் இசைந்தே வந்திருக்கிறது. இதனால் இவர்களுடைய தாய்மொழிப் பற்று தமிழகத்தாரை விடக் குறைந்ததென்று கூறுவதற்கில்லை. இதுவேறு ஒருவகைப்பட்ட தொடர்பு எனவே தோன்றுகிறது".

திராவிடத் தேசியத்துக்கான தருக்க நெறிகளை ஆசர் வரிசைப் படுத்துகிறார்.

1 தென்னிந்தியாவின் திராவிடமொழிகள் வடபுலத்தின் இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்கு முற்றிலும் வேறுபட்டவை.

2 ஆரியரின் குடியேற்றத்துக்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே இந்தியாவில் திராவிடமொழி பேசும் மக்கள் வாழ்ந்தனர்.

3 திராவிடத் தென்னகம் தன்னகத்துக்கு வெளியில் உள்ள ஓர் ஆட்சிக்கு முழுக்க உட்பட்டிருந்ததே இல்லை.

4 பழந்திராவிட இலக்கியங்கள் மிகத்தொன்மையானவை மட்டுமல்லாமல் சமற்கிருத ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டவையுமல்ல.

5 பிற்காலத்தில்கூட இந்திய இலக்கியத்துக்குத் தமிழின்கொடை தனித்தன்மை வாய்ந்தது. தமிழரின் தனித்தன்மை உணர்வு சரியானதே என்னும் இப்பிரித்தானிய ஆய்வாளர்,

"கடந்த காலத்தில் திராவிடப் பகுதிகளின் நெருக்கமான பண்பாட்டு ஒருமைப்பாடும், இந்நாளில் இப்பகுதியின் மொழிப் பற்றுறவின் விழிப்புணர்வுப் பரவலும் தென்னகம் முழுக்க இத்தனித் தன்மையைக் கொண்டுள்ளதைக் காட்டுகிறது" என முடிக்கிறார்.

செய்தி:- இந்தியன் எ.ஃசுப்பிரசு
விடுத்தோன்: இல. க. சுபாசு, (க. மு )
தமிழிலக்கியம்.
தியாகராசர் கலைக்கல்லூரி மதுரை–9.

குறிப்பு:- (பிறர் திராவிடம் எனக் குறிப்பது பழந்தமிழை என்றும் திராவிடர் எனக் குறிப்பது பழந்தமிழரை என்றும் அறிக)


# "வலம்புரி"

ஆசிரியர்: **புலவர் இறைக்குருவனார்**

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் திங்களேரிதழ். தனியிதழ் 0–25 காசு

ஆண்டுக்கட்டணம் 6 உருபா. அரையாண்டுக் கட்டணம் 3 உருபா.

**விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.**

**வலம்புரி, மதுரை–10.**




"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

---

## கட்டுரைக் களஞ்சியம்

ஆசிரியர்: பா. வளன் அரசு க. மு.
கிடைக்குமிடம்:- கதிரவன் பதிப்பகம்,
13. சிவன் கோயில் வடக்கு வீதி
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.
விலை: உருபா 2–00

குறிப்பிட்ட ஓரிரு பொருள்கள்பற்றி ஆழமாக, தெளிவாக நூல் எழுதுவது ஒருவகை. பல்வேறு பொருள்கள்பற்றி நுனிப்புல் மேய்ந்தாற் போல, கோடிட்டுக் காட்டிச் செல்வது மற்றொருவகை. கட்டுரைக் களஞ்சியம் இரண்டாவது வகையைச் சார்ந்தது. 192 பக்கங்களில் கட்டுரைத்திறன் முதலாக வள்ளுவரும் காந்தியடிகளும் ஈருக 39 கட்டுரைகளைக் கொண்டுள்ளது. குறைந்த அளவு மூன்றே பக்கங்களில்கூட ஓரிரு கட்டுரைகள் முடிந்துள்ளன.

இவை போன்ற கட்டுரைகள் எழுதுவது கதம்பம் தொடுப்பது போன்றதுதான் என்ருலும் மலர்க்காட்டில் ஏற்ற மலர்களைப் பறித்து வந்து அவற்றை நிரற்படுத்திக் கோப்பதும் ஒரு கலைதானே. அது போல ஏற்ற கருத்துகளைத் தெரிந்தெடுத்து முறைப்படுத்தித் தருதற்கும் திறமை வேண்டற்பாலதுதான்.

ஒலிம்பிய விளையாட்டு, ஐந்தாண்டுத்திட்டம், நாணய மதிப்புக் குறைப்பு, குடிமக்களும் கணக்கெடுப்பும் போன்ற கட்டுரைகளில் ஆண்டுகளும் புள்ளி விளக்கங்களும் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக 'நாணய மதிப்புக் குறைப்பு' எனும்

கட்டுரையில் பல்வேறு நாடுகளிலும் நாணய மதிப்புக் குறைக்கப் பெற்ற ஆண்டு, அதற்கான சூழல், அதன் பயன் போன்றவற்றைச் சுட்டியிருப்பது சிறப்பாக இருக்கிறது. ஆனால் 'குடிமக்களும் கணக் கெடுப்பும்' எனும் கட்டுரையில் (பக். 135) 'தமிழகத்தின் மக்கள் தொகை 4 கோடி 11 இலக்கம்' 'சென்னை நகரில் மட்டும் மக்கள் தொகை 2 கோடி 5 இலக்கம்!' என்றும் குறித்துள்ளார். என்ன கணக்கோ?

உலகத் தமிழ் மாநாடு எனும் கட்டுரையில் ஒரேயடியாகப் புகழ்ந்து தள்ளியிருக்கிறார் ஆசிரியர். நடைபெற்று முடிந்துள்ள மூன்று உலகத் தமிழ்மாநாடுகளிலும், குறிப்பாகத் தமிழகத்தில் நடைபெற்ற மாநாட்டில் அறிவு போற்றப்பெறவில்லை. ஆரவாரமே மிக்கிருந்தது. உண்மையான தமிழறிஞர்களின் ஒப்பற்ற கருத்துகள் உலக அரங்கில் ஒலிக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப் பெறவில்லை. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் பேரறிவு இன்னும் குடத்திலிட்ட விளக்காகவே இருக்கிறது. இதுபோன்ற குறைகளையும் ஆசிரியர் கோடிட்டுக் காட்டியிருந்தால் நூலைப் படிக்கும் இளந் தலைமுறையினர் உண்மை நிலையை உணர்ந்து கொள்ள வாய்ப்பாக இருந்திருக்கும். வரலாற்றை எந்நிலையிலும் மறைக்கக் கூடாது; மறைக்கவும் முடியாது.

கூடியவரை மொழித் தூய்மை பேணியிருக்கும் ஆசிரியர், எதுகை மயக்கத்தில் தம்மை மறந்து விடுகின்றார் "மனிதரெலாம் புனிதராகும்..........." (பக். 118), '...........வேகத்தையும் விடுதலைத் தாகத்தையும் தோற்றுவித்தார்," (பக் 123) "............ பத்தியும் புத்தியும் பெருகிய..........."(பக். 162) இப்படி எதுகைக்கு முதலிடம் கொடுத்துப் பிறமொழிச் சொற்களைக் கலந்து விடுகிறார். இவையன்றி, சாந்தி, அநுபவம், நிபுணர், விருது, சனநாயகம், இதயம், நிதி, கவிதை, ஆன்மீகம், மனிதன், தரணி, கனரகம், சிந்தனை, மிருகம், புண்ணியம், சமூகம், வயது போன்ற பல சொற்கள் கலந்து வந்துள்ளன. இவற்றையும் நீக்கி எழுதியிருக்கலாமே. ஆசிரியர் தனித்தமிழ் இயக்கக் கொள்கையினராயிருந்தும், இவர் செய் திருக்கும் கொள்கை நழுவல், இவ்வியக்கத்தையே பிறர் குறைகூறும் அளவுக்குக் கொண்டுவிட்டாலும் வியப்பதற்கில்லை.

கட்டுரைத் தலைப்புகளும், உட்தலைப்புகளும் 'இளமையும் தலைமையும்,' 'போரும்சீரும்,' 'தோற்றமும் ஏற்றமும்,' 'ஆக்கமும்

ஊக்கமும்,' எனுமாறு போல எடுப்பாக அமைந்துள்ளன. எனினும் தலைப்புகட்கு ஏற்றாற்போல் உள்ளீடு பொருட்செறிவாக இல்லை. தலைப்புகள் அமைப்பதில் செலுத்திய கவனத்தைப் பொருளிலும் செலுத்தியிருக்கலாம். சில விடங்களில், கட்டுரைகளை எழுதிவிட்டுத் தலைப்புகளைக் கொடுத்தாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

குலப்பட்டங்களை நீக்கி எழுதியிருப்பது பாராட்டத்தக்கது எ-டு. "சொல்லின் செல்வர் இரா. பி. சேதுவின் கட்டுரைகள்........"(பக்.3)

"........தமிழக அரசின் பெருந்துணையுடனும் பேராதரவுடன் சீராக நடத்தியது," (பக் 7) "தரம் உயர்ந்த ஒரு நாடகங்களைச் சுவைக்கவும்........" (பக் 45) போன்ற தொடர்ப்பிழைகள் ஒன்றிரண்டு காணப் பெறுகின்றன. எழுத்துப் பிழைகள் அருகியே காணப்பெறினும் கடைமை (பக்.6), நாடாமல் (பக் 15) போன்ற பிழைகள் தவிர்த்தே ஆக வேண்டியன.

நடை தெளிவாகவும், ஆற்றொழுக்காகவும், எடுப்பாகவும் அமைந்திருக்கிறது. நூற்பயனைப் பொறுத்தமட்டில் ஏதோ இருக்கிறது எனலாமே யன்றி ஓகோவெனச் சொல்வதற்கில்லை. -குமரன்


# 'தென்மொழி'

## கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம்: | 9 உருபா. | 10-50உருபா | 14உருபா |
| அரையாண்டுக்கட்டணம்: | 5உருபா | 6 உருபா. | 7-50 |
| தனியிதழ்: | 75காசு | 90 காசு | 1-10 |

# 'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர்: உலக முதல்வி

0 தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 50 காசு ஆண்டுக்கட்டணம் 6 உருபா

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்!

'தமிழம்', 17, நாகப்ப முதலி தெரு, சென்னை-2.

'தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்குச்' சொற்பொழிவுகள்: (தொடர்ச்சி)

# 0 தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டும்!

## 0 அப்படிப் பிரிந்தாலொழிய நமக்கு வழி வகையில்லை !

0 தமிழன் இந்தி பேசவே கூடாது- ஒருவன் பேசினாலும் அவன் அரத்தத்தை முழுவதும் அவன் உடலிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

0 தமிழ் மொழியே உலகில் முதன் முதல் தோன்றியது! மிகப் பழமையானது; அதுவே மற்ற எல்லா மொழிகளுக்கும் பிறப்பிடமானது!

0 இப்பொழுது தமிழ்மொழியை எல்லாரும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டனர்.

0 நூறு எருமைகளைக் கூட ஒழுங்காக இயங்கச் செய்து விடலாம்; ஆனால் இப்பொழுதுள்ள (இந்திரா காந்தி) அரசை மட்டும் ஒழுங்கு செய்துவிட முடியாது.

0 தஞ்சைக் கருத்தரங்கில் அறிவியல் முனைவர், புதுப்புனைவாளர் கோ. து. (G. D. Naidu) அவர்கள் கருத்துரை!

தஞ்சையில் கடந்த சிலை சுள (31—12—72) அன்று நடந்த தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கில், பெரும்புலவர் நீ. கந்தசாமியார் அவர்களின் தலைமையில், கோவைத்தொழில் முனைவர், அறிவியலறிஞர் கோ. துரைசாமி (G. D. Naidu) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு:

தலைவர் அவர்களே! பாவாணர் அவர்களே! நிலவழகனார் அவர்களே! சொல்லழகனார் அவர்களே! பெருஞ்சித்திரனார் அவர்களே! மற்றும் இங்கு வந்திருக்கும் பெரியோர்களே! தாய்மார்களே!

நான் இந்தக் கருத்தரங்கின் முடிவு பற்றித்தான் பேசலாமா? அல்லது வேறு கருத்துப்பற்றியும் பேசலாமா என்பது தெரியவில்லை. எவ்வளவு நேரம் பேசவேண்டும் என்றும் தெரியவில்லை. ஆனால் எவ்வளவு நேரம் ஆகிறதோ அவ்வளவு நேரம் ஆகட்டும்.

நான் காலையில் தமிழில் மிகவும் ஊக்கமாகப் பேசியவர்களைப் பார்த்தேன்; கேட்டேன்; சுவைத்தேன். அதுபோல் தமிழில் பேசுவதற்கு என்னால் முடியாது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்பது போல், நான் தெலுங்கன்; தெலுங்கிலிருந்து தமிழில் வந்து புகுந்திருக்கின்றேன். நான் தமிழை எதிர்பாராத வகையாக (accidental)ப் படித்தவன், படிக்க வேண்டும் என்று படித்தவனில்லை. ஏதோ ஒரு நேர்ச்சிக்காகப் படித்தது தான். இன்றைக்கு எழுபத்து நான்கு, எழுபத்து ஆறு ஆண்டுகளுக்கு முந்தி, மணல் பரப்பி, விரலால் எழுத வேண்டும். அப்பொழுது தாளோ, கரிக்கோலோ, கரும் பலகையோ—ஒன்றும் கிடையாது. அதுபோல எழுதிக் கொண்டிருக்கும் பொழுது அந்த மணலையே எடுத்து ஆசிரியர் கண்களில் அடித்து விட்டேன். அவருக்குக் கண்ணே போய் விட்டது. அப்புறம் வேறு ஒருவர் வந்தார். அவருக்கும் கண்களில் மணலைத்தூவினேன். அவருக்குக் கண் போகவில்லை. ஆனால் என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்வதில்லை என்று சொல்லி அனுப்பி விட்டார், வீட்டிற்கு. வீட்டில் என்ன பண்ணினேன்; அப்பொழுது நல்ல எருமைத் தயிரும் சோளச்சோறும் போட்டுக் குடிக்கக் கொடுப்பார்கள். அதை இரண்டு கைகளாலும் வாங்கி ஐந்துகை பத்துகை என்று குடிப்பேன். என் வீட்டில் இருந்த பெண் அப்படி ஒருநாள் எனக்கு அச்சோற்றைக் கொடுத்துக் கொண்டிருந்து விட்டு ஏதோ ஒரு வேலையிருக்கிறது என்று சொல்லி வீட்டிற்கு உள்ளே போனாள். நான் அவளைப் போக வேண்டாம் என்று தடுத்தேன். நான் தடுத்தும் அவள் உள்ளே போய் வந்தாள். வந்தவுடன் அவளை இந்தக் கையாலேயே கன்னத்தைப் பார்த்து ஓங்கி ஓர் அடி கொடுத்தேன். அவளுடைய பல் ஒன்று அப்படியே அங்கு விழுந்து விட்டது.

அப்புறம், அக்காலத்தில், ஒரு பாட்டி என்னை ஒவ்வொரு நாள் இரவிலும், ஒன்றுக்குப் போவதற்காக வெளியே தூக்கிக் கொண்டு போய் விட்டு விட்டு, அதற்குப்பின் கொண்டு வந்து படுக்க வைப்பாள். ஒரு நாள் அவள் அப்படிச் செய்ய மறந்து போய்

விட்டாள். இரவு பத்து மணிக்கு வரவில்லை. எனவே கொஞ்சநேரம் பார்த்திருந்துவிட்டு அவள் படுத்திருந்த கட்டிலுக்குமேல் ஏறி, அவள் மேலேயே ஒன்றுக்குப் போனேன். (சிரிப்பு) உடனே அவள் எழுந்து என்னை அடித்தாள். அடிவாங்கிக் கொண்டு போய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டேன். அவள் அப்படி என்னை அடித்ததற்குப் பகரமாக, நானும் ஏதாவது அவளுக்குச் செய்ய வேண்டும்; அதற்குப் பின்தான் தூங்க வேண்டும் என்று எண்ணிய படியே, உட்கார்ந்திருந்தவன், பிறகு அப்படியே தூங்கிவிட்டேன். பிறகு அப்படியே ஒவ்வொருநாளும் உட்கார்ந்து உட்கார்ந்தே தூங்கிப் பழகினேன். ஆனால் ஒருநாள் தூக்கமே வரவில்லை. அன்றைக்கு என்னை அடித்த பாட்டியைப் பழிவாங்க எண்ணினேன். அவள் அன்று தன் தலைமுடியைக் கட்டிலுக்கு ஓரத்தில், கீழே தொங்கவிட்டபடி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். உடனே அங்கு ஒரு சிறு விளக்கிலிருந்த மண்ணெண்ணெயை அவள் தலைமுடியில் ஊற்றித் தீயை வைத்து விட்டேன். அன்று எனக்கு வீட்டில் சரியான அடி கொடுத்தார்கள். அந்த அடியெல்லாம் வாங்கிக் கொண்டேன். ஆனால் என்னைப் பள்ளிக்கூடத்திற்கும் கொண்டு போய் விடமுடியவில்லை. என் குறும்புத்தனத்தையும் அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அதன்பின் என் தந்தையார் என்ன செய்தார்கள், எங்கள் தோட்டத்தில் ஒரு வீடு இருந்தது. எனக்கொரு காவலை வைத்து அந்த வீட்டில் என்னைக் கொண்டுபோய் விட்டு விட்டார்கள். அதற்கு முன் நான் தமிழ் எழுத்துகளையெல்லாம் பழகியிருந்தேன். படிக்கவும் பழகியிருந்தேன். அந்தப் பயிற்சியை வைத்துக் கொண்டு நானே பல தமிழ்ப் பொத்தகங்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லி அந்தச் சிறையிலிருந்தே படித்து வந்தேன். அப்படிப் படித்துக் கடைசியில் மதுரைப் பண்டிதர் தேர்வையெழுத எண்ணங் கொண்டு அதற்குரிய பொத்தகங்களை வாங்கினேன். திருக்குறள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பிரபுலிங்கலீலை, தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை, தொல்காப்பியம் அதில் மட்டும் நாலைந்து உரைகள், எழுத்ததிகாரம் இளம்பூரணம் உரை, நச்சினார்க்கினியர் உரை, சேனாவரையர் உரை, இன்னும் என்னென்னவோ உரையாசிரியர்களுடைய உரைகள், அப்படி எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் யாவும்

வாங்கிப் படித்தேன். அவற்றிலெல்லாம் அந்தத் தேர்வுக்கென வேண்டிய பகுதிகள் சிலவாயிருந்தாலும், நான் வாங்கிய பொத்-தகங்கள் முழுவதும் படித்தேன்.

அந்தத் தோட்டத்தில் என்னை அப்படியே பத்து ஆண்டுகள், வீட்டுக்கே வராதபடி, சிறை வைத்திருந்தார் என் தந்தையார். பத்து ஆண்டுகளுக்குப் பின் ஒரு விளக்கணி விழா (தீபாவளி) அன்று, என்னைக் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னர், வந்து குளித்து சாப்பிட்டு விட்டுத் திருவிழாக் கொண்டாடி விட்டுப் போகட்டும் என்று. வீட்டுக்கு வந்த அன்றைக்கு, தெருவில் ஒரு வைக்கோல் வண்டி வந்தது. நான் யாரையோ போய்க் கெஞ்சிக் கூத்தாடி ஒரு நெருப்புக்குச்சி வாங்கிக் கொண்டு வந்து, அந்த வைக்கோல் வண்டிக்குத் தீ வைத்து விட்டேன். (பெருஞ்சிரிப்பு). அந்த வைக்கோல் வண்டிக்காரன் எனக்கு முன்னல் என் தந்தையாரிடம் வந்து சொல்லிவிட்டான். உடனே நான் குளிக்கவும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி, மீண்டும் என்னைத் தோட்டச் சிறைக்கே கொண்டுபோய் விட்டுவிடச் சொல்லி விட்டார்கள். அப்படி அங்கிருந்துகொண்டுதான் நான் தமிழைப் படித்தேன். தமிழிலும் இலக்கண இலக்கியம் எல்லாம் படித்தேன். அதற்குப்பின் கணியம் (சோதிடம்) படித்தேன். அக்கணியம் படித்து விட்டு எங்கள் ஊரில் இருந்த நாற்பத்தாறு பெரிய தலைகளுக்குக் கணிப்புக்குறிப்புகள் எழுதினேன். எல்லாரும் மூன்று ஆண்டுகளில் இறந்து போய் விடுவார்கள் என்று குறிப்பெழுதினேன். (பெருத்த சிரிப்பு ஆரவாரம்). அப்படி எழுதியதை அன்று கணியத்தில மிகக் கெட்டிக்காரராயிருந்த சாமிநாதப் பணிக்கர், என்பவரிடம் காட்டி, இக்குறிப்புகள் சரியாக இருக்கின்றனவா என்று கேட்டேன். அவரும் சரியாக இருக்கின்றன என்று சொல்லிவிட்டார். அதனல் "ஓ! மூன்று ஆண்டிலேயே நாம் எல்லாரும் செத்துப்போய் விடுவோமோ" என்று அந்த நாற்பத்தாறு பேர்களுக்கும் அச்சம் கண்டு விட்டது. அதே போல் அவர்களுள் மூப்பத்தாறு பேர்கள் இறந்தே போய் விட்டார்கள். ஒருவர் மட்டும் நான் கணியத்தில் சொல்லியிருந்தபடி நாள், மணி, நேரம் தவருமல் இறந்து போனர். மற்றவர்களெல்லாரும் குறிப்பிட்ட நாளுக்கு ஒரு கிழமை, ஒருமாதம், ஆறுமாதம் இடைவெளிகளில் இறந்து போனர்கள். மீதி ஒன்பது பேர் சாகவில்லை. ஒன்பது பேர்களில் நானும் ஒருவன். நானும் சாகவில்லை. ஏன் சாகவில்லையென்று

அப்புறம் திரும்பவும் ஆராய்ந்தேன். அப்படி அதிலேயே இரண்டு மூன்று ஆண்டு ஈடுபட்டு உழன்று கொண்டிருந்து விட்டு, "கணியத்திற்கும் மாந்தனுக்கும் தொடர்பே இல்லை" என்று முடிவு கட்டினேன். இதுபற்றி 1932 இலே அமெரிக்காவிலே, கிலீவ்லாந்து என்னுமிடத்தில் ஒரு சொற்பொழிவே செய்தேன். அந்தச் சொற்பொழிவு மூன்றரை மணி நேரம் நடந்தது.

பிறகு, 1935-இல் திருச்சியில் பெரியார் திரு. ஈ. வே. இரா. நடத்திய இந்தியெதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டுப் பல இடங்களில் பேசினேன். 1945-இல் சேலத்திலும் போராட்டத்தில் ஈடுபட்டேன். 1935-இல் இந்தி ஒரு மொழியே இல்லை. அந்த மொழியைத் தமிழன் பேசினால் அவன் உடலிலுள்ள அரத்தத்தையெல்லாம் உறிஞ்சியெடுத்து விட்டு, வேறு அரத்தம் பாய்ச்ச வேண்டும் என்று சொன்னேன். அதே போலப் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கடுமையாகச் சொல்லி வந்திருக்கிறேன். என்னுடைய சில கருத்துகளைக் கேளுங்கள். (என்று சொல்லி அவர் கொண்டு வந்திருந்த பல குறிப்புகளிலிருந்து ஒன்றையெடுத்து அருகிலிருந்த ஆசிரியர், பெருஞ்சித்திரனாரிடம் கொடுத்து உரக்கப் படிக்கச் சொன்னார். ஆசிரியர் கீழுள்ளவற்றைப் படித்துக் காட்டினார்.)

"இசையானது கக்கல்கழிச்சல் (cholera), குடற்காய்ச்சல் (Typhoid,) கொள்ளை நோய் (Plague) அல்லது வேறு எந்தவகை நோய் நச்சுயிரிகளைக் காட்டிலும் மிகுதியான நோய்களை உண்டாக்கக் கூடியது." (கூட்டத்தில் சலசலப்பு)

(இதுபடிக்கப் பெற்றவுடன், கோ. து. அவர்கள் கூட்டத்தைப் பார்த்து, இதை யாராவது ஒப்புக் கொள்கிறீர்களா? என்றார். யாரும் விடை கூறாததைப் பார்த்து, "நீங்கள் ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள்." என்று கூறிவிட்டு, அடுத்த கருத்தைப் படிக்கச் சொன்னார். அவர் படிக்கிறார்.)

"கணியம் (சோதிடம்) ஆனது நச்சுக்காய்ச்சல், கக்கல் கழிச்சல் அல்லது வேறு எந்த நோயாலோ உண்டாகும் இறப்புகளைக் காட்டிலும் மிகுதியான இறப்புகளை உண்டாக்குகின்றது." (பெருஞ் சிரிப்பு)

(உடனே, "இதை ஒப்புக் கொள்கிறீர்களா" என்று கோ. து. கேட்டார். தலைவர் அவர்கள் "ஒப்புக்கொள்கிறேன்" என்று சொன்னார். அடுத்து மேலும் படிக்கச் சொன்னார்)

"கடவுளும், வேத முடிபுகளும் மேற்கூறியபடி இசை, கணியம் இவை இரண்டும் சேர்ந்து, எவ்வளவு துன்பங்களை மாந்தனுக்குக் கொடுக்கின்றனவோ, அவற்றைவிட மிகுதியாகக் கொடுக்கின்றன" (கூட்டத்தில் ஆரவாரமும் பெருஞ்சிரிப்பும் எழுந்தன)

(அடுத்து, மேலும் படிக்கப் படுகிறது)

"இப்பொழுதிருக்கும் பித்தர்களை விட மிகுந்த எண்ணிக்கை உள்ள பித்தர்களையும், மிகவும் இழிவான பித்தர்களையும், மாய ஆவிகள், அல்லது இறந்தவர்களின் ஆவிகள் இவற்றின் கொள்கைகள், தோற்றுவிக்கின்றன."

"தமிழ், இக்காலத்திற்கேற்ற வளர்ச்சியில் குன்றிய இம்மொழி அரைப்பித்தர்களையும், மிக வெறியர்களையும், கஞ்சர்களையும் தோற்றுவிக்கின்றது."

(கோ. து. மேலும் தொடர்கிறார்.)

இக்கருத்துகள் சென்னையில் 14, 15—2—1948-இல் நடந்த அனைத்துலகத் தமிழர் மாநாட்டில் சொல்லப்பெற்றவை. இப்படித் தமிழன்பர்கள் மிகுதியும் கூடியிருந்த அந்த மாநாட்டிலே, இந்தக் கருத்தைச் சொன்னவுடன், கல்லாலும் தடியாலும் அடிக்காத குறை தான். அவ்வளவு காரமாக எல்லாரும் எழுந்து விட்டார்கள். அப்புறம் 'நான் தெலுங்கன். நான் போய் இந்தத் தமிழர் மாநாட்டிலே இப்படிச் சொன்னால் எனக்குக் கல்லடியும் தடியடியும் கிடைக்கும் என்று தெரிந்தேதான் இதைச் சொன்னேன். அப்படியிருந்தும் ஏன் இப்படிச் சொன்னேன் என்று உங்களுக்கெல்லாம் தெரியவேண்டும் என்று விரும்பினால் பேசச் சொல்லுங்கள். இல்லையானால் நான் பேசாமல் உட்கார்ந்து கொள்கின்றேன்." என்று கூட்டத்தைப் பார்த்துக் கேட்டேன். "சரி, பேசுங்கள்" என்று கூட்டத்தினர் சொன்னார்கள். அதற்குப் பிறகு இரண்டே கால் மணி நேரம் அங்குப்பேசினேன். தமிழைவிட ஆங்கிலத்தில் நன்றாகப் பேச வருமென்றதற்கு 'அப்படியானால் அதிலேயே பேசுங்கள்' என்று சொன்னார்கள்.

(அதன்பின் கோ. து. அவர்கள் இன்னோர் அறிக்கையை எடுத்துக் கொடுத்து அதைப் படிக்கக் கேட்க, அவ்வறிக்கை படிக்கப் பெறுகிறது),

"இப்பொழுதைய இளைஞர்களுக்கு நம் கடமை இப்பொழுதுள்ள கோயில்களும், பல்கலைக்கழகங்களும், பள்ளிகளும் அழிக்கப் பெற்றுச் சாம்பலாக்கப் பெறவேண்டும்."

(அதற்கு கோ. து. அவர்கள் கீழ்வருமாறு விளக்கம் கொடுத்தார்.)

அவற்றை எரித்துச் சாம்பலாக்காமற் போனால் என்னுகும் என்ருல், நமக்குப் பின்வரும் குழந்தைகள், "இந்தக் கல்லெல்லாம் ஏது? இந்தக் கதவுகளெல்லாம் ஏது? என்று கேட்டால், இவையெல்லாம் பள்ளிக்கூடத்துக்காகவும், கோயிலுக்காகவும் பயன் படுத்தப் பெற்றிருந்தன என்று சொல்ல வேண்டும் இல்லையா? அப்படிச் சொல்லிவிட்டால் அந்தக் குழந்தைகள் மனம் கெட்டுப் போகவே செய்யும். எனவேதான் அவற்றை அழிப்பதோடு மட்டு மில்லாமல், சாம்பலாகவே ஆக்கவேண்டும் என்று சொல்கிறேன்.

(அடுத்து வேறு ஓர் அறிக்கையும் படிக்கப் பெற்றது)

"இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்தியாவில் பேசும் படங்களே வேண்டியதில்லை"

(அதற்கு கோ. து. அவர்கள் கீழ்வரும் விளக்கம் கூறுகிருர்).

இதை எழுதி இருபத்தைந்து ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஆனாலும் மேலும் மேலும் இதை எழுதியும் சொல்லியும் வருகின்றேன். அங்கு, என் பயிற்சிக் கூடங்களில் மாணவர்கள் இருக்கிருர்கள். அவர்களில் எவராகிலும் ஒருநாள் திரைப் படத்திற்குப் போனால் இருபத்தைந்து உருபா தண்டம் கொடுக்க வேண்டும், வகுப்புகளுக்கு ஒரு நிமையம் கழித்து வந்தாலும் இருபத்தைந்து உருபா தண்டம். ஒரு செய்தித்தாள் (Newspaper) படித்தாலும் இருபத்தைந்து உருபா தண்டம் கட்ட வேண்டும். சென்ற ஆண்டு விளக்கணி (தீபாவளி) விழாவன்று முப்பது மாணவர்கள் திரைப்படங்களுக்குச் சென்று விட்டார்கள். முப்பது மாணவர்களையும் ஒரேயடியாக அங்கிருந்து நீக்கி விட்டேன்.

இவர் (பெருஞ்சித்திரனுரைக் காட்டி) கோவைக்கு என்னிடம் வந்தார். உங்கள் திட்டத்தை (தமிழ்நாடு தனியாகப் பிரியவேண்டும் என்பதற்காக நடத்தவிருக்கும் போராட்டத் திட்டத்தை) இன்னும் ஐந்தாண்டுகள் பொறுத்துச் செய்யுங்கள் என்று சொன்னேன். 'அது முடியாது' என்று போனுர். அதன்பின் திருச்சிராப்பள்ளியில் மாநாடு கூட்டி எல்லாம் பண்ணி, மீண்டும், அந்த ஐந்தாண்டு பொறுத்துத் தான் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து விட்டார். ஆனுல் நானே, ஐந்தாண்டுகள் இல்லே, இன்னும் இரண்டு ஆண்டுகளிலேயே 1975 இலேயே செய்யலாம் என்று இருக்கின்றேன். (பெரிய கைதட்டலும் கூட்டத்தினர்) மகிழ்ச்சியும். (அஃதாவது இந்தி பேசக் கூடாது. அப்படி இந்தியில் ஒருவன் ஒருசொல்லேப் பேசினுலும் அவன் அரத்தம் முழுவதையும் எடுத்துவிட வேண்டும். கல்லூரியில் படிக்கிற மாணவர்களுக்கு அரத்தத்தை எடுப்பதற்குப் பயிற்சி யளிக்க வேண்டும். அந்த இந்தி அரத்தம் எவனுடம்பிலும் இருக்கவே கூடாது. அத்துடன் தமிழ்நாடு தனியாகப்பிரிய வேண்டும் (கைதட்டல்) அது பிரிந்தாலொழிய நமக்கு வழிவகையில்லே (மேலும் கைதட்டல்).

இந்தக் கருத்தரங்கைப்பற்றி என் கருத்தைச் சொல்ல வேண்டுமானுல், தமிழன் எங்கே பிறந்தால் என்ன? எப்படிப் பிறந்தால் என்ன? இங்கே பெரும்பான்மையும் தமிழர்கள். பெரும்பான்மை தமிழர்களாக இருக்கும் பொழுது அவர்கள் எங்கே பிறந்தால் என்ன? பெரும்பான்மை சொன்னபடி நடக்க வேண்டியதுதானே குடியரசு!

நான் மனேன்மணியத்தில் உள்ள 'நீராருங்கடலுடுத்த' என்னும் பாட்டைத்தான் 'சனகனமன'வுக்குப் பகரமாகப்பாடவேண்டும் என்று சொல்கின்றேன். இப்பொழுது முதலில் "நீராருங்கடலுடுத்த"வை வைத்துவிட்டு, சனகனமன வை இறுதியில் பாடுகிறுர்கள். நம் தமிழர்கள் கூட்டங்களில் நாம் நீராருங் கடலுடுத்த பாட்டையே பாடலாம். வேறு யாராகிலும் வடநாட்டுக்காரன் வந்தால் அவனுக்கு வேண்டுமானுல் 'சனகனமன' பாடலாம் (சிரிப்பு)

எனவே, நான் தமிழை வெறுப்பவனல்லன். நான் தமிழில் உள்ள எல்லாப் பொத்தகங்களேயும் வைத்திருக்கின்றேன். ஒரு நூல் நிலேயமே வைத்திருக்கின்றேன்.

(இவ்விடத்தில் கோ. து. அவர்கள் மீண்டும் ஓர் அறிக்கையைக் கொடுத்துப் பெருஞ்சித்திரனாரைப் படிக்கக் கேட்க அவர் படிக்கிறார். அது கோ. து. அவர்கள் அமெரிக்காவில் உள்ள பேராசிரியர் ஒருவருக்கு எழுதிய மடலாகும்)

'அன்புள்ள ஐயா'

உலகத்திலேயே முதன் முதலாக ஏற்பட்டதும், மிகப் பழமையானதும், மற்ற எல்லா மொழிகளுக்கும் (மடலில் பாஷைகளுக்கும் என்று குறிக்கப்பெற்றிருந்தது) பிறப்பிடமானதும், தென் இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள பெரும்பாலோரால் பேசப் பெறுவதுமான தமிழ்மொழியில் (பாஷையில்) இந்தக் கடிதத்தை, இந்தியாவிற்கு மறுபாதியில் இருக்கும் எங்கள் ஊரிலிருந்து மிக மகிழ்ச்சியுடன் (அதில் சந்தோஷத்துடன் என்றிருந்தது) எழுதுகிறேன்."

—(என்று அந்த மடல் தொடங்கி, கோ. து. அவர்கள் அமெரிக்காவில் தொழில்துறைக் கல்வியை ஒரு மாணவராக இருந்து பயின்ற நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்து எழுதப் பெற்றிருந்தது. அதன் பின் கருத்தரங்கு பற்றிய அவர் கருத்தைச் சுருக்கமாகத் தெரிவிக்குமாறு அவையோர் கேட்டுக் கொள்ள அவர் கூறியதாவது)

—இது போலக் கருத்தரங்குகள் போட்டு நாம் நம் கருத்துரைகளைச் சொல்வதனால் ஒருபயனும் விளையப்போவதில்லை. இது போல் எத்தனையோ கூட்டங்கள் கூட்டப்பெற்று விட்டன. எத்தனையோ கருத்துகளும் கூறப்பெற்று விட்டன. என்ன பயனைக் கண்டோம்; ஒன்றுமில்லை. இந்தக் கூட்டத்திற்குப் பின்னால் இதன் தீர்மானத்தையோ முடிபையோ அரசினர்க்கு அனுப்பினால், அவர்கள் என்ன செய்துவிடுவார்கள். எதையெதையோ குப்பையில் போட்டுவிட்டதைப் போல இதையும் குப்பையில் போட்டுவிடப் போகிறார்கள்.

இப்பொழுது தமிழ்மொழியை எல்லாரும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்டனர்; புலவர்களெல்லாரும் சேர்ந்துதான். நான் ஒரு நூல் நிலையம் வைத்திருக்கின்றேன். அந்த நூல் நிலையத்தில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக எல்லாவகை நூல்களையும் சேர்த்து வைத்திருக்கின்றேன். அந்த நூல்களையெல்லாம் எவ்வாறு நான்

வாங்கினேன் என்று சொன்னால், சென்னைக்குப் போகும் பொழுதெல்லாம் முதல் வகுப்புக்கு மாறாக மூன்றாம் வகுப்பில் போவது, வருவது; இரண்டு வகுப்புக்கும் உள்ள வேறுபாட்டுக் கட்டணத்தைக் கொண்டு நூல்களை வாங்கி வருவது. அப்படியே அறுபதாயிரம் பொத்தகங்கள் சேர்த்துவைத்துள்ளேன். அந்த நூல் நிலையத்தை எடுத்துக்கொள்ளும்படி நகராட்சி மன்றத்தைக் கேட்டேன். அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. அப்பொழுது நகராட்சியில் இருந்தவர்கள் பேராயக்கட்சி உறுப்பினர்கள். அவர்கள் தேர்தலில் நின்றால் அவர்களுக்கு எதிராக எவரையாகிலும் ஒருவரை நான் நிற்க வைப்பேன். எவரும் எதிர்ப்பில்லாமல் சும்மா வந்துவிடக் கூடாது. பொது மக்களைப் போய்க் கெஞ்சிக்கேட்டு, அதற்கப்புறந்தான் வரவேண்டும் என்பது என் கருத்து. அப்படி நான் அவர்களுக்குப் போட்டியாக ஆட்களை நிறுத்தி வைப்பதனால், என் நூல் நிலையத்தை எடுத்துக் கொள்வதில்லை என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். என்மேல் உள்ள வெறுப்பால் அறுபதினாயிரம் பொத்தகங்களைச் சும்மா கொடுத்தாலும் எடுத்துக்கொள்ள மறுக்கின்றார்களே! அதற்குப் பின்னால் நகரமன்றத்திலேயே ஒரு நூல்நிலையம் வைத்தார்கள். அதற்கு நன்கொடை கொடுத்துக் கைச்சாத்து வாங்கி வைத்திருக்கின்றேன். அறுபதினாயிரம் பொத்தகத்தை வேண்டா என்று சொல்லிவிட்டு, நன்கொடை உருபா: 250/-ஐ வாங்கிக் கொண்டார்கள்.

என் நூல் நிலையத்தில் பல பகுதிகள் உண்டு. அவற்றில் 'இந்திய இளைஞர்களின் மூளையை அரிக்கின்ற கறையான்கள்' (white ants for young Indian Brains) என்பது ஒரு பகுதி. இன்னொரு பகுதி ''காலத்தை வீணாக்க' என்பது. அதில் இராமாயணம், பாரதம், பாகவதம், பிரபுலிங்கலீலை, பெரியபுராணம் முதலிய எல்லாப் புராணங்களையும் வைத்திருக்கின்றேன். கணிய(சோதிட)ப் பொத்தகங்களையெல்லாம் ''நடக்காத பொய்கள்'' என்னும் பகுதியில் வைத்திருக்கின்றேன். இதுபோல இன்னும் சில பகுதிகள் உண்டு. இந்திய இளைஞர்களின் மூளையை அரிக்கின்ற கறையான்கள்'' என்னும் பகுதியில் அறுநூறு பொத்தகங்கள் உள்ளன. அதற்கென்று ஒரு கட்டிடத்தைக் கட்டி, அந்தக் கட்டடத்தைத் திறப்பதற்கென்று, உயர்திரு, ஆர். கே. சண்முகம் அவர்களைக் கூப்பிட்டேன்; வரவில்லை என்று சொல்லி விட்டார்.

வயவர் பி. தி. இராசனைக் கூப்பிட்டேன். அவரும் வரவில்லை என்று சொல்லிவிட்டார். வயவர். பி. ஆர். இரெட்டியும் வரவில்லை என்று சொலலிவிட்டார். வயவர். இராமசாமி அவர்கள் வந்து, அந்த விழாவிலே கலந்து கொண்டிருந்துவிட்டு இறுதியிலே அந்தக் கட்டடத்தைத் திறப்பதற்கு 'வரமுடியாது' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். இவர்கள் எல்லாரும் ஏன் அதைத் திறப்பதற்கு வரவில்லையென்றால், அந்தக் கட்டடத்தின் நுழை கதவுக்கு முன்னால், அந்த "இந்திய இளைஞர்களின் மூளையை அரிக்கின்ற கறையான்கள்" என்னும் தொகுதியில் உள்ள நூல்கள் அனைத்தையும் குவியலாகப் போட்டு, அவற்றிற்கு அந்தக் கட்டிடத்தைத் திறக்கப் போகிறவர் கன்னெயை (Petrol) விட்டு நெருப்பு வைக்க வேண்டும். அந்த நெருப்பின் சூட்டிலேயே அந்தக் கதவு திறந்து கொள்ளும். அதன் பின் கட்டிடத்திற்குள்ளே போனால், அங்குப் பொறியியல், அறிவியல் முதலிய நூல்கள்தாம் இருக்குமே தவிர வேறு ஒரு நூலும் இருக்காது. அந்த, மூளையை அரிக்கின்ற கறையான்கள் குவியலில் என்னென்ன பொத்தகங்கள் இருக்கும் என்றால், சொல்கின்றேன்:

சென்னை, திருவல்லிக்கேணியில் நகரவண்டி போய் இறுதியாய் நிற்கும் பகுதியில் ஒரு விடுதி உள்ளது. (அது விக்டோரியா கல்லூரி விடுதி என்று சொல்லப்பெற்றது). அந்த விடுதிக்கு முன்பு ஒருமுறை போய், அங்குள்ள மாணவர்கள் அறைகளிலெல்லாம் புகுந்து, அவர்கள் என்னென்ன பொத்தகங்களைப் படிக்கிறார்கள் என்று ஆராய்ந்தேன். அவர்கள் படிக்கின்ற பொத்தகங்களையும் அவர்கள் கடந்த தேர்வுகளில் பெற்ற மதிப்பீடுகளையும் கேட்டு எழுதிக் கொண்டேன். அந்தநிலை எப்படியிருக்கின்றது என்றால், சார்லசு டிக்கன்சு போன்றவர்களின் புதினங்கள், கதைகள் முதலியவற்றைப் படிப்பவர்கள் கணக்குகளில் முப்பது முப்பதுக்கும் கீழாகவே எண்கள் பெறுகிறார்கள். ஆனால் ஆங்கிலத்தில் தொண்ணூறு அளவில் எண்கள் பெறுகிறார்கள். அதற்குப் பின்னர்தான், புதினங்கள், துப்பறியும் கதைகள், பாலியல் கதைகள் முதலியவற்றையெல்லாம் "இந்திய இளைஞர்களின் மூளையை அரிக்கின்ற கறையான்கள்" என்று பாகுபாடு செய்தேன். இன்னமும் அந்தக் கட்டிடம் திறக்கப்படாமலேயே இருக்கிறது. பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன.

(இவ்விடத்தில் அந்த நூல்களை எரிப்பதற்கு யாராகிலும் கோவை வருகின்றீர்களா? "என்று கோ. து. அவர்கள் மேடைமேல் உள்ளவர்களைக் கேட்டார். எல்லாரும் வருவதாகச் சொன்னார்கள். தலைவர் அவர்கள் தமக்கு மருத்துவ நூல்கள் வேண்டும் என்று சொன்னார்கள். அங்கு வந்து பெற்றுக்கொள்ளும்படி சொன்னார். பெருஞ்சித்திரனாரிடம் 'நீங்கள் வருகிறீங்களா?" என்றார். அவர், "நான் இப்பொழுதே வேண்டுமானாலும் வருகிறேன். ஆனால் எனக்கு நூல்கள் வேண்டாம். என் வினைப்பாட்டுக்குத் தேவையான கருவிகள் தாம் வேண்டும்" என்று சொன்னார். அதற்கு, கோ. து. அவர்கள், "இரண்டரைக்கோடி உருபா முதலீடாகப் போட்டு, (அவற்றிற் கெல்லாம் கணக்குச் சொல்கிறார்) நிறைய கட்டிடங்களும் கருவிகளுமாகச் சேர்த்து வைத்திருக்கின்றேன். அவற்றிற் கெல்லாம் உள்ள மொத்தப் பூட்டுகளை தொள்ளாயிரத்து ஐம்பது ஆகும். அத்தனைப் பூட்டுகளையும் என்னிடமுள்ள ஒரே திறவு கோலில் திறக்கலாம். இன்னும் அங்குள்ள நிலக் காப்பறையில் எல்லாக் கருவிகளையும் பதுக்கி வைத்துள்ளேன். அங்குள்ள ஓரிடத்தில் உள்ள ஒரே ஒரு சொடுக்கியை அமுக்கினால் போதும், அத்தனைக் கட்டிடங்களும் கருவிகளும், பொறிகளும் பொடிப் பொடியாகிப் போகும்."-என்று சொல்லி மேலும் தொடர்ந்தார்........

.... இந்த அரசு இருக்கிறதே; அதை எவரும் செம்மைப் படுத்திவிட முடியாது. '**நூறு எருமைகளைக் கூட ஒழுங்காக இயங்கச் செய்து விடலாம்; ஆனாலும் இந்த அரசை மட்டும் எப்பொழுதும் ஒழுங்கு செய்துவிட முடியாது**" என்றே ஒரு பலகையில் கொட்டையாக எழுதி வைத்துள்ளேன். நான் வைத்துள்ள இரண்டரைக்கோடி உருபாவுள்ள அந்தக் கட்டிடங்கள், கருவிகள் அனைத்தையும் இந்த அரசுக்குக் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அரசிடமிருந்து விடையே வரவில்லை. **இந்திரா காந்திக்கு** நேராகவே எழுதியும் விடையில்லை..........!

.... சென்னையிலுள்ள இக்கின்பாதம்சுக்குப் போய்ப் பாருங்கள் அங்குள்ள நாற்பது பொத்தகங்களில் மூன்றிலேதான் ஆண்கள் படமோ வேறோ போட்டிருக்கும். மீதியுள்ள பொத்தகங்கள் எல்லாவற்றிலும் பெண்கள் படந்தாம் போட்டிருக்கும். அப்படிப் போட்டால்தான் நம் கல்லூரி மாணவர்கள் அவற்றை வாங்குவார்கள்

என்று அப்படிப் போட்டிருக்கிறார்கள். நானும் என் நூலகத்தில் சில புதினங்களைப் பார்த்திருக்கின்றேன். ஆனால் முழுவதையும் படிப்பதில்லை. ஆங்கிலக் கதைப் பொத்தகம் ஒன்றை எடுப்பது; நடுவில் உள்ள ஏதோ ஒரு பக்கத்தைத் திறப்பது; அதில் உள்ள பத்தி ஒன்றைப் படிப்பது. அப்படிப் படித்தால் அதில் ஏதோ ஒரு திருட்டுத் தனத்தைப் பற்றியோ, அல்லது ஒரு பையனையோ பெண்ணையோ அழகாக வண்ணனை செய்வதாகவோ இருக்கும். உடனே அதைக் கறையான் வகையில் சேர்த்து விடுவது. இப்படி நூலகத்திலிருந்து அறுநூறு நூல்களைத் தள்ளியிருக்கின்றேன்........

...தமிழில் படிப்பதற்குக் கொஞ்சம் நூல்கள்தாம் உண்டு. திருக்குறளில் கூட நூற்று அறுபது குறள்கள்தாம் படிக்கலாம். எல்லாவற்றையும் படித்தால் பித்தனாகி விடுவான். (தலைவர் இக்கருத்தை நகைத்தவராக மறுத்துச் சொன்னார்). ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்று திருக்குறள் சொல்கிறது. எனவே ஒவ்வொருவரும் திருக்குறளில் 160 அல்லது 150 குறள்களை எடுத்துக் கொள்ளலாம். எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவற்றைப் படித்து அவை சொல்வது போல் கட்டாயம் நடக்க வேண்டும். நடக்க வில்லையானால் 100 குறள்களைப் படிப்பது கூட பயனில்லை. அப்புறம் தேர்ந்தெடுக்கப் பெற்ற பத்து அறநூல்கள் உள்ளன. இவைதாம் தமிழில் படிக்க வேண்டியவை. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, கலித்தொகை, மூதுரை, இவைபோல் ஒரு பத்து நூல்கள், திருக்குறளில் ஒரு நூற்றைம்பது குறள்கள், நாலடியாரில் ஒரு முப்பது பாட்டுகள், நான்மணிக்கடிகையில் எழுபது பாடல்கள்—இவைதாம் தமிழில் படிக்க வேண்டியவை. மற்றவையெல்லாம் முழுதும் புரட்டு, பொய், புளுகுகள்தாம்! பெரியபுராணம், பிரபுலிங்க லீலை போன்றவையெல்லாம் என்ன? எதற்காகப் படிக்க வேண்டும்? (இவ்விடத்தில் தலைவர் 'பெரியபுராணம் கட்டாயம் படிக்க வேண்டிய நூல் என்றார். திருக்குறள் எவ்வளவு நன்மை பயக்குமோ அவ்வளவு நன்மை பயக்கும் என்றார். உடனே கோ. து. அவர்கள்...) என்ன நன்மை? பெரியபுராணம் ஒரு புளுகுப் புராணம். (என்றார். அதற்குத் தலைவர் அந்த நூலைப் படிக்கும் முறையுடன் படித்தால் இத்தனை அறநூல்களிலும் வருகிற பயன் வரும் என்றார். அதற்குக் கோ. து. அவர்கள்...] எப்படிப் படித்தாலும் அதைப்போல முட்டாளாக்கக் கூடிய நூல் வேறு ஒன்றுமில்லை... [என்றார். பலத்த கைதட்டல்] தலைவர் அக் கருத்தை வலுவாக மறுத்தார்? பெரிய

புராணத்தில் என்ன பிழை என்பதைக் கோ. து. அவர்கள் சொன்னால் தாம் அதை மறுப்பதாகவும், அதுபற்றித் தாம் தருக்கமிட அணியமாக விருப்பதாகவும் தலைவர், பெரும்புலவர் நீ. கந்தசாமி அவர்கள் உறுதியான குரலுடன் கூறினார்கள். இந்த நிலையில் பெருஞ்சித்திரனார் அவர்கள் குறுக்கிட்டு கோ. து. அவர்களிடம், மாநாட்டுத் தொடர்பாக அஃதாவது கருத்தரங்குத் தொடர்பாக அவர் கருத்துகளைக் கூறுமாறு கேட்டுக் கொள்ளவே, கோ. து. அவர்கள் தொடர்ந்தார்]

சரி, இப்பொழுது தமிழர்கள் குமரிநாட்டிலேயே பிறந்தார்கள், வெளியிலிருந்து வந்தவர்களல்லர்; என்பதனால் என்ன பயன்? என்று தெரியவில்லை. ஆனால் அவர்களின் பிறந்த நாடு குமரிநாடுதான் என்பதை ஒப்புக் கொள்ளலாம். [இக்கருத்தைப் பலர் ஒப்பாமலிருக்கின்றார்கள். அவர்கள் கூறுவது தவறு என்பதை உறுதிப் படுத்தவே இக் கருத்தரங்கு கூட்டப் பெற்றிருப்பதாகப் பெருஞ்சித்திரனார் அவர்கள் கோ. து. விடம் எடுத்துக் கூறினார்கள்.] அப்படி அவர்கள் ஒத்துக்கொள்ளாமல் போனால் போகிறார்கள். அதனால் என்ன? [என்றார். உடனே, பெருஞ்சித்திரனார், அவர்கள் அவ்வாறு ஒப்பாமல் தமிழர்களுக்கு இழிவு சாற்றுகிறார்கள் என்றும், அதன் அடிப்படையில் தமிழர்களை மேலும் மேலும் மீள முடியாத அடிமைத் தனத்தில் கொண்டுபோய் ஆழ்த்துகின்றார்கள் என்றும் விளக்கினர்.] நாம் அப்படி ஆழ்த்துவதற்கு உப்பட்டால் தானே ஆழ்த்துவார்கள். நாம் உட்படாமல் இருந்து கொண்டால் போகிறது; [என்றார். அப்படி உட்படாமல் செய்வதற்குத்தான் உண்மை வரலாறு தெரிவிக்கப்பட வேண்டும் என்று பெருஞ்சித்திரனார் சொன்னார். அவர் கோ. து. அவர்களைப் பார்த்து, 'ஐயா, இப்பொழுது நீங்கள் இரண்டரைக் கோடிச் சொத்துகள் வைத்திருப்பதாகக் கணக்குச் சொன்னீர்களே, அதுபோல் நாமும் இந்த வகையில் நம் கணக்கைச் சொல்கிறோம். இப்படி நமக்குச் சொந்தமான நிலம் இது; இந்த வகையில் நமக்கு வரலாறு உண்டு; என்கின்றபடி நம் வரலாற்றுக் கணக்கை நம் மக்களுக்குக் காட்டுகின்றோம்'' என்று விளக்கிச் சொன்னார்'] சரி, முடிவாகச் சொல்கிறேன். தமிழ்மொழியோ தமிழர்களோ எங்கேயோ யிருந்து வந்துவிடவில்லை. அந்தமொழியும் இந்த நாட்டுக் குரியதுதான்; அவர்களும் இந்த நாட்டுக்கு உரிமையானவர்கள்தாம். சமசுக்கிருதம் போன்றதன்று தமிழ். தமிழிலிருந்துதான் சமசுக்கிருதமே தோன்றியது. தமிழர்கள்தாம் முதல் மாந்தர்கள். (ஆதிமனுஷர்கள்). ஆனால் என் கருத்து என்னவென்றால், அவர்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கு முந்தியே பிறந்திருந்தாலும் அதனால் என்ன பயன் என்பதுதான். (இவ்விடத்தில் பெருஞ்சித்திரனார் அவர்கள் குறுக்கிட்டு,

"அப்படிச் சொல்வது வரலாறு; வரலாறு தெரியாமல் அறிவியல் (விஞ்ஞானம்)கூட இயங்க முடியாது. நேற்றைக்கு என்ன, எதுவரை கண்டு பிடித்தார்கள் என்று தெரிந்தால்தான் இன்றைக்கு, இனிமேல் என்ன கண்டு பிடிக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ள முடியும். எனவே இக் கருத்தரங்கைப் பற்றி, அஃதாவது வரலாற்றுப்படி, நீங்கள் ஆராய்ந்தபடி முடிவான கருத்து என்ன என்பதைச் சொல்லுங்கள்" என்று சொன்னார்கள்.)

நான் இப்பொழுது அன்று; முப்பது நாற்பதாண்டுகளுக்கு முன்பே சொல்லி யிருக்கின்றேன். உலகத்தில் உள்ள எல்லா மொழிகளுக்கும் பிறப்பிடமானது தமிழ் (பெரிய கைதட்டல்) (இவ்விடத்தில் கோ. து. அவர்கள் தாம் அச்சிட்டு வெளியிட்டுள்ள பழைய நூலின் பகுதியொன்றினை எடுத்துப் படிக்கச் சொன்னார்கள். பேரா. திரு. கோ. நிலவழகனார் அவர்கள் அதை வாங்கிப் படிக்கத் தொடங்கினார்)

"...கடந்த 1968-இல் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் (World Tamil Conference) ஐயா (கோ. து.) அவர்கள் தம்முடைய கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். அதுதான் அவர்கள் சொல்ல வந்த முடிவு" என்று முன்னுரையாகக் கூறி அப் பகுதியைக் கீழ்வருமாறு படிக்கின்றார்.

"Unfortunately no country in the whole world, knows the value, efficiency, high development of the Tamil language therefore they have taken English, French, and other languages.

"...தமிழின் பெருமை தெரியாத காரணத்தினாலே உலகத்தில் ஆங்கிலம், பிரஞ்சு முதலிய மொழிகளைப் பாராட்டுகின்றார்கள்; அதற்குப் பழமையுண்டு; சிறப்புண்டு" என்று சொல்லி யிருக்கின்றார்கள். O


# தீச்சுடர்

சிறப்பாசிரியர் : பாவலர் பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்: க. வெ. நெடுஞ்சேரலாதன்
தனியிதழ் 00-25 ஆண்டுக் கட்டணம் 3-00
தொடர்புக்கு: தீச்சுடர், திங்களிதழ், மதுரை-10

# மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்[1]

பி. இராமநாதன் க.இ; ச.இ.
வழக்குரைஞர்

இந் நிலவுலகையும் பிறகோள்களையும் உள்ளடக்கிய ஞாயிற்று மண்டிலக் குடும்பம் விண் வெளியில் தோன்றி ஏறத்தாழ 450 கோடி ஆண்டுகள் ஆகின்றன. இந் நிலவுலகில் உயிரிகள் தோன்றி ஏறத்தாழ 350 கோடி ஆண்டுகள் ஆகின்றன. அவற்றுள்ளும் கடந்த 72 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து தோன்றிய உயிரிகளே பாறைப் படிவங்களை [பாசில்] விட்டுச்செல்லும் நிலைக்கு வளர்ச்சி அடைந்தன.

2 மாந்தன் என்று, குரங்கினத்திலிருந்து பிரித்துக் கூறத் தக்க உயிரி (Homo Australopithecus — "தென் கோளக் குரங்கு மாந்தன்"] தோன்றியது ஏறத்தாழ 20 இலக்கம் ஆண்டுகட்கு முன்னர்தான். அதனினும் திருந்திய Homo Erectus— "நிமிர்ந்த மாந்தன்"—தோன்றியது இற்றைக்கு 10 இலிருந்து 5 இலக்கம் ஆண்டுகட்கு முன்னர். அவ்வினம் மேலும் வளர்ச்சியடைந்து, ஏறத்தாழ 50,000 ஆண்டுகட்கு முன் இக்கால மாந்தனின் நிலையை அடைந்தது.[2]

---

[1] மாரிசு சுவாதெசு மேற்கண்ட தலைப்பில் எழுதியநூலைப்* பற்றிய கட்டுரை

* The origin and diversification of language-by Morris Swadesh, Edited by Joel Sherzer Routledge & Kegan Paul; London 1972; பக்கங்கள் XVIII; 350

விலை: 3.75 பவுன் [ஏறத்தாழ உருவா 80]

[2] மாந்த இன வரலாற்றைப்பற்றி The living races of man-by Carlton S. Coon Jonathan Cape; London; 1966; [பக்கங்கள் 436] என்னும் நூலிற் காணலாம். பல்வேறு காலக்கட்டங்களில் உலகனைத்திலும் இருந்த மாந்தர் தொகை பின்வருமாறு இருந்திருக்கும் என E. S. Deevy (Junior) என்பவர் Scientific American; September 1960; PP195-6 இல் கணக்கிட்டுள்ளார்: 10 இலக்கம் ஆண்டுகட்கு முன் $1\frac{1}{4}$ இலக்கம் மாந்தர்கள்; 3 இலக்க ஆண்டுகட்கு முன் 10 இலக்கம் மாந்தர்கள்; 25,000 ஆண்டுகட்கு முன் 33 இலக்கம்; 10000 ஆண்டுகட்கு முன் 53 இலக்கம்; 6000 ஆண்டுகட்கு

இவ்வினங்கள் ஒன்றன்பின் ஒன்று என்ற முறையில் தோன்றியன அல்ல. குறித்த காலக் கட்டத்தில் இன்னநிலை என்ற வகையில் வளர்ச்சி அடைந்தனவும் இக் காலத்திற் கிட்டியுள்ள பாறைப் படிவங்களைக் கொண்டு அறிவிய லறிஞர்கள் செய்ய இயன்றுள்ள தோராயமான கால வரையறையே மேற்சொன்னது. நில உலகம் தோன்றியது முதல் ஆன 450 கோடி ஆண்டுகளை 24 மணிநேரம் எனக் கொண்டால் "முழு மாந்தன்" காலமாகிய கடந்த ஓர் இலக்கம் ஆண்டுகள் ஒரு நொடிக்கே சமமாகும். [அந்த ஒரு நொடிக்குள்தான் மாந்தனுக்கு மாந்தன் இழைத்து வரும் கொடுமைகள், கேடுகள் என்னே!]

3. தொடக்கக் காலத்தில் விலங்குகளைப் போல் அச்சம், மகிழ்ச்சி, துயரம், வெறுப்பு முதலிய உணர்ச்சிகளைக் காட்டும் குரலோசைகளும், விளியோசைகளும், இயற்கை யொலிகளைத் திருப்பிப் பலுக்கும் ஓசைகளுமே மாந்தரிடம் இருந்து, பின்னர் மூளைத்திறன் முற்ற முற்ற மொழி தோன்றியிருத்தல் வேண்டும். அது தோன்றிய காலம் இற்றைக்கு ஓர் இலக்கம் ஆண்டுகட்கு முன்னர்தான் இருக்கும் என்பர் சுவாதெசு—வும் பிறரும். மொழி, தோன்றிய பின்னரே மாந்தன் ஆசியாக் கண்டத்திலிருந்து இற்றைக்கு 40,000 அல்லது 35,000 ஆண்டுகட்கு முன்னர் அமெரிக்காவுக்கும், இற்றைக்கு 32,000 ஆண்டுகட்கு முன்னர் ஆசுத்திரேலியாவுக்கும் சென்று குடியேறினன். எனவேதான் அக் கண்டங்களின் மொழிகளும் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்காக் கண்ட மொழிகளும் சிலபல வகைகளில் ஒப்புமை உடையவையா யுள்ளன.

4. மாந்த இனத்தின் முதல் தாய்மொழி ஒன்று? பலவா? ஒன்றாயின் இன்று உலகில் வழங்கும் அனைத்து மொழிகளும் அதனின்றும் கிளைத்தவையாகும். பலவாயின் உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு முதன்மொழிகள் தோன்றியிருத்தல் வேண்டும். பன்னாட்டு மொழியியல், மாந்தவியல். அறிஞருள், தமிழ்நாட்டில் ஞா. தேவநேயர் கூறுதல்போல் முதல் தாய்மொழி ஒன்றே என்பாருமுளர். மாரிசு சுவாதெசு அவருள்

(அடிக்குறிப்பு 2-இன் தொடர்ச்சி)

முன் 8 கோடியே 65 இலக்கம்; கி.பி. முதல் ஆண்டில் 13 கோடியே 30 இலக்கம்; கி.பி. 1900-இல் 161 கோடி; கி. பி. 1970-இல் 350 கோடி. இதுவரை இவ்வுலகில் வாழ்ந்து மடிந்த மாந்தர் மொத்த எண்ணிக்கை 11,000 கோடியாகும் என்பது அவர் கணக்கு.

ஒருவர்.[3] அவரால் 1967-இல் எழுதப்பெற்று 1972-இல் வெளிவந்த "மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்" ["வளர்ச்சியும்" என்பதை விட "மொழி பல் உருக்கொண்டு திரிந்த வரலாறும்" என்பது சரியாக இருக்கும்] என்னும் ஆராய்ச்சி நூல் இக் கருத்தை நிலை நாட்டப் போந்த தாகும். இனி, மாந்தரிடைத் தோன்றிய முதன் மொழிகள் பல என்னும் மாறுபட்ட கருத்துடையவரும் பலர்.

5. 1909 முதல் 1967 வரை வாழ்ந்திருந்த சுவாதெசு தனித் தன்மை வாய்ந்த மொழியியலறிஞர். சாபிர் (Sapir) போன்ற அறிஞரிடம் பயின்றவர். அமெரிக்க ஒன்றிய நாடுகளிலுள்ள ஏல் பல்கலைக்கழகம், மெக்சிகோவிலுள்ள மெக்சிகோப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மொழியியல் பேராசிரியராக இருந்தவர். அவர் இடச் சாரி அரசியல் கொள்கையினர் என்ற காரணியத்தால் பொது வுடைமையினரை வேட்டையாடும் வெறி [மக்கார்தி தூண்டிவிட்டு, வந்தது] மிக்கிருந்த 1948-56 ஆண்டுகளில் அ. ஒ. நாடுகளிலுள்ள எந்தப் பல்கலைக்கழகமும் அவரை ஆசிரியராக அமர்த்த மறுத்து விட்டது. பின்னர் 1956-இல் அவர் மெக்சிகோவுக்குச் சென்று குடியேறிவிட்டார். "மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் நூலின் முகவுரையில் தெல் ஐம்சு (Dell Hymes) என்னும் மொழியியலறிஞர் கூறுவதுபோல் சுவாதெசுவின் இந்நூல் வண்ணனை மொழியியல் ஒன்றே போக்கென் றிருக்கும் மேனாட்டு மொழியியலறிஞரிடைப் புதிய பாதையைக் காட்டுவிப்பதாகும். இந்நூல் முற்றுவிக்குமுன் சுவாதெசு இறந்துவிட்டதால் அவர் மாணவர் செர்சர் இதனை 1972-இல் வெளியிட்டுள்ளார்.

6. சொல் ஆய்வு அடிப்படையில் மொழிகள் "ஒன்று பலவாகும்" கால வரம்புகளைத் திட்டவட்டமாக ஆய்வு செய்வதற்கான புதுமுறையைக் கண்டுபிடித்து மொழியியலில் தம் பெயரை நாட்டியவர் சுவாதெசு. அம்முறைக்கு Lexicostatic glotto-

[3] Horry Hoijer என்பவரும் அக்கருத்தினரே: " the invention of language was so for reaching, so revolutionary that it must have occurred just once"— 'மொழியைக் கண்டுபிடித்தது கரைகாணா விளைவுகளை மாந்த இன வரலாற்றில் புகுத்தியதும், புரட்சித் தன்மை வாய்ந்ததும் ஆன நிகழ்ச்சியாகும். அத்தகைய நிகழ்ச்சி ஒரு முறைதான் நிகழ்ந்திருக்க இயலும்' ("Language today" by Arcihbald A. Hill; New york and London; Basic Books, 1969—பக்கம் 58 ஐப்பார்க்கவும்.

chronology என்று பெயர். அடிப்படையான நூறு பொருள்களுக்கு இரண்டு அல்லது மேற்பட்ட மொழிகளில் வழங்கும் சொற்களின் ஒப்புமையை ஆராய்வதே அம்முறையாகும். [கோட்பாடுகள் மாறுவதால் மாற்ற மடையாத பொருள்களைப் பற்றிய சொற்களே அந் நூற்றில் சேர்க்கப்பெறும். எடுத்துக் காட்டாக, யான், நீ, இது, அது, பார், கேள், வாய், பல், கல், மண், மலை, மீன் போன்றவற்றுக்கான சொற்களே எடுத்துக்கொள்ளப்பெறும்.] இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளுக் கிடையே அத்தகைய சொற்களில் தோராயமாக 86 விழுக்காடு ஒப்புமை இருந்தால் அவை ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஒரு மொழியாக இருந்திருக்க வேண்டும். (86% × 86%) = 74% ஒப்புமை இருந்தால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒன்ருயிருந்திருத்தல் வேண்டும் என்ற முறையில் கணக்கிட்டுச் செல்வதே அம் முறையாகும். கழிநெடுங் காலத்துக்கு முன் ஒன்ருயிருந்த மொழிக ளிடையேயுள்ள ஒப்புமையை நிலைநாட்ட இம் முறை மட்டும் போதாது என்பதை சுவாதெசு—வே ஏற்றுள்ளார்.

7. மேற்கண்ட முறையில் பின்னேக்கிச் சென்ருல் கடந்த 10,000 ஆண்டுகளுக்கு முன் உலகிலிருந்த மொழிக ளனைத்தையும் ஐந்தாறு பெருங் குடும்பங்களுக்குள் அடக்கலாம் என்பதை மொ. தோ. வ. நூலின் முதல் நூறு பக்கங்களில் சுவாதெசு விளக்குகிருர். கடந்த 10,000 ஆண்டுகளில் மொழியில் ஏற்பட்டுள்ள பெருமாறுதல்களைப் போல் அதற்கு முந்திய காலத்தில் ஏற்பட்டிரா என்பதை ஓர் எடுத்துக் காட்டால் நிறுவுகிருர்: மாந்தன் தோன்றிய ஏறத்தாழ 20 இலக்க ஆண்டுகளில் பயன்படுத்திய கற்கருவிகளில் பெருமாற்றம் ஏதுமில்லை. இற்றைக்கு 10,000 ஆண்டுகட்கு முன் புதிய கற்காலம் தொடங்கிய பின்னரே கற்கருவிகளைச் செய்வதில் புரட்சித் தன்மையான மாறுதல்கள் ஏற்பட்டன. பின்னர் மளமளவென, மாழைகளைக் கையாளுதல், வேளாண்மை, நாகரிகம் ஆகியவை வந்துவிட்டன. மொழி வளர்ச்சி வரலாற்றுக்கும் இது பொருந்தும் என்பது சுவாதெசு கருத்து.

8 வேர்ச்சொல் அமைப்பு முறை ஒற்றுமை, அகரவரிசை ஒற்றுமை [குறிப்பாக மெய் ஒற்றுமை], இலக்கண ஒற்றுமை ஆகியவற்றின் அடிப்படையில், இந்தோ-ஐரோப்பியம், செமித்திக், ஊரல்-அல்தாயிக் ஆகிய மூன்று பண்டை மொழியினங்களும் ஒரு முன் மொழியிலிருந்து கிளைத்திருக்கலாம் என்பதனை 115-126 பக்கங்களில் விளக்குகிருர். "சொற்களின் தோற்றம்" என்னும் ஆரும் அதிகாரத்தில் [ப 182-212] உலகின் பல்வேறு மொழிகளிலும் [மேற்சொன்ன

மூவினங்களே யன்றிப் பிற இனங்களிலும்] எண், உறவுமுறை, எதிர்மறை, சுட்டு, மூவிடப் பெயர், நிறம் முதலியவற்றைக் குறிக்கும் சொற்களிடையே பெரிதும் ஒலியொற்றுமையோ அல்லது கருத்தொற்றுமையோ உள்ளதை விளக்குகிறார். பல்வேறு ஒலிகள் வாயில் பிறக்கும் இடம், முறை, ஒலியளவு ஆகியவற்றுக் கேற்பக் கருத்துகள், பொருள்களின் பெயர்கள் மாந்தன் தொல்மொழியில் இடப்பட்டதனால்தான் இன்றும் உலகின் வெவ்வேறு மூலைகளிலுள்ள மொழிகளிலும் சில கருத்துகள், பொருள்களின் பெயரிடையே ஒப்புமை காண இயல்கிறது என்பது அவர் கொள்கை.[4] உலகில்

---

[4] பக்கங்கள் 209-10-இல் சுவாதெசு தந்துள்ள ஓர் எடுத்துக் காட்டைக் காண்க:

Men ⎫ Vibratory sound, broad soft base to soft point,
Mel ⎬ woman's breast, **and extended**: soft, vibratory
Mer ⎭ motion, mind.

| | | | |
|---|---|---|---|
| Samoan: | malu | = | soft |
| Basque: | malba | = | weak |
| | malso | = | slow |
| | mardo | = | soft |
| Arabic | mals | = | smooth, soft |
| | mald | = | soft |
| Chehen | meelin' | = | weak |
| Tamil | mel (மெல்) | = | fine, tender |
| Latin | mollis | = | soft |
| Russian | myi'liy | = | kindly |
| English | mild | | |
| Cholon | -cman | = | know |
| Tarasco | minzi-ta | = | mind, heart, stomach |
| Sanskrit | manas | = | mind |
| Latin | menti | = | ,, |
| English | mind | | |
| TokharianA | mnu | = | thought |
| Gothic | muns | = | ,, |
| Lithuanian | mintis | = | ,, |
| Sanskrit | m'anya | = | think |
| Armenian | imanam | = | understand |

உள்ள மொழிகளில் பெரும்பாலன அண்மைச் சுட்டுக்கு இகரத்தையும் சேய்மைச் சுட்டுக்கு அகர, உகரங்களையும் பயன்படுத்துவதை 141-ஆம் பக்கத்தில் குறித்துள்ளார்.

9. ஏழாம் அதிகாரத்தில் [ப 213-226-இல்] மாந்த இனத்தின் தொல்மொழி பல கூறுபட்டுத் திரியத் தொடங்கிய காலம் இற்றைக்கு 20,000 ஆண்டுகட்கு முன்னர் இருக்கலாம் என்றும், அப்பொழுதும் தொடக்கக் காலங்களில் திரிபின் வேகம் மிகக் குறைவாகவே இருந்திருக்கும் என்றும் முடிவு செய்கிறார்.

10. சுவாதெசுவின் கருத்துகள் பல பாவாணர் தம்முடைய மொழியியல் நூல்களில் கூறும் கருத்துகளுக்கு அரண் செய்வன வாகும். மாந்த இனத்தின் தொல்மொழியின் இயல்புகளாக சுவாதெசு கூறுவனவற்றுள் பலவற்றைத் தமிழில் காணலாம். ஆயினும் தமிழைப் பற்றிச் சுவாதெசு அறிய இயலாது போனது, நம் நல்வாய்ப் பின்மையே யாகும். [அவர் தம் நூலில் தமிழ்ச் சொற்கள் ஏழெட்டு மட்டுமே பயன்படுத்தி யுள்ளார்]. அறிந்திருந்தால் தம் கருத்துகள் பலவற்றுக்குச் சுவாதெசு இன்னும் வலிவு சேர்த்திருக்கலாம்.

11. முதல் 226 பக்கங்களில் சுவாதெசுவின் நூல் முடிகிறது. 228-270 பக்கங்களில் அவர் வரலாற்றைத் தெல் ஐம்சு வரைந் துள்ளார். 271-323 வரை "What is glottachronology" முதலிய சுவாதெசு கட்டுரைகள் உள்ளன. இறுதியில் சுவாதெசு நூல்கள் பட்டியலும் பொருட்குறிப் பகரமுதலியும் உள்ளன. O

---


0 மாந்தவியல் முடிபுகளும், மொழியியல் முடிபுகளும், இலக்கண இலக்கிய அகப்புறச் சான்றுகளும் கொண்டு உருவாக்கிய பண்டை வரலாற்றுக் கருவூலம்.

0 தமிழர் தம் கைகளில் மிளிரவேண்டிய நூற்செல்வம்!

# தமிழர் வரலாறு

மொழிஞாயிறு: ஞா தேவநேயப்பாவாணர், க. மு.

**வெளிவந்து விட்டது:** **விலை உருபா: 12-50.**

(பதிவஞ்சலில் வேண்டுவோர் 3 உருபா சேர்த்து விடுக்க.)

கிடைக்குமிடம்

தே. மணி

ஆ-1135-2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,

காட்டுப்பாடிவிரிவு (அஞ்); வ. ஆ. மாவட்டம்.

# உண்மைத் தமிழர் அனைவர்க்கும் உறைத்த எச்சரிக்கை.

பயிர் தழைத்துவரும்போதே பக்கத்துக் களைகளும் வளர்ந்தோங்கி வந்து நெருக்கிக் கெடுப்பதுபோன்று, மூவாயிரம் ஆண்டாக ஆரியச் சூழ்ச்சியால் மறைந்தும் குறைந்தும் நலிந்தும் நறுங்கியும் அளவிலா அல்லற்பட்டு வந்த தமிழ், மறைமலையடிகள் காலத்திினின்று மறுமலர்ச்சி யடைந்துவரும் இந்நாளில்; தக்க அறிவும் ஆராய்ச்சியு மின்றிப் பட்டம் பதவிகளையே துணைக் கொண்டும், குன்றன்ன பொருளீட்டுவதையே குறிக் கொண்டும், பகைவர் பாங்காகிக் குமரிநாட்டுத் தீந்தமிழைக் குலைத்துவரும் வையாபுரிகள் கை ஓங்கிவருவது, மிகமிக அஞ்சத்தக்க தீக்குறியாம்.

தமிழ்ப்பெயர் தாங்காமை, தமிழ்த்தூய்மை போற்றாமை, முக்கழக வுண்மையை ஒப்புக்கொள்ளாமை, இந்தியெதிர்ப்பில் ஈடுபடாமை, சமற்கிருத வழிபாட்டைத் தடுக்காமை இவ்வைந்தும் தலையாய வையாபுரிகளின் பண்புகளாம்.

"உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் "பிணிகள்"—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
ஆமருந்து போல்வாரு முண்டு"

பொருளீட்டுவது வேறு; புலந்தொகுப்பது வேறு. இவ்விரண்டும் தம்முள் முரண்பட்டவை. அதனாலேயே,

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு."

என்றார் திருவள்ளுவர்.

"நாவின் கிழத்தி யுறைதலிற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து."

என்றார் நாலடியார்,

பொருளீட்டுவது ஒருவரின் தனியுரிமையே. ஆயின், தமிழைக் கெடுத்துப் பொருளீட்டுவது ஒருவர்க்கும் உரிமை யன்று. தன்னலத்தார் எத்தகைக் கட்புல வுண்மையையும் மறுக்க அஞ்சார் என்பதை,

•

"—நேர்நின்று.
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு."

என்னும் குமரகுருபர அடிகள் கூற்றுக்காட்டும். பொதுமறை கண்ட பொய்யாமொழியாரோ, உலகறிந்த உண்மையை மறுப்பாரை,

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்."

என்று வன்மையாகக் கடிந்தார்.

பண்டைப் பாண்டிநாட்டு முக்கழக வுண்மையை, மறைமலையடிகள் ந. மு. வேங்கடசாமியார், பண்டிதமணி கதிரேசர், சோமசுந்தர பாரதியார் முதலியோர் மட்டுமன்றி; உ. வே. சாமிநாதர், இரா. இராகவனார் (ஐயங்கார்), மு. இராகவனார் (ஐயங்கார்), முதலியோரும் ஒப்புக்கொண்டுள்ளனர். சென்ற சிலமாதம் சஎ-ஆம் பக்கல் தஞ்சையில் நடைபெற்ற தமிழன் பிறந்தகத் தீர்மானிப்பு மாநாட்டில், இற்றைத் தமிழ்ப்புலவருள் நடுநாயகமாக விளங்கும் மாணிக்கம் போன்ற நடுநிலைச் சான்றோர் பர். வ. சுப. மாணிக்கனாரும், குமரிநாட்டுத் தமிழ்த் தோற்றத்தையும் முக்கழக வுண்மையையும் ஒப்புக்கொண்டு விட்டார்.

இங்ஙன மிருப்பவும், 'தில்லிச் சாகித்திய அக்காதெமி' என்னும் இலக்கிய மன்றத்தால் ஏவுண்டு பர். மு. வ. வால் வரைவுண்டு அண்மையில் வெளிவந்த 'தமிழ் இலக்கிய வரலாறு', தமிழின் தோற்றத்தையும் எதிர்கால நிலையையும் காட்டாத முண்ட வரலாறா யிருப்பதுடன்; குமரி நாட்டுத் தமிழ்த் தோற்றத்தை மறைத்தும், முக்கழக வுண்மையை மறுத்தும், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியரை அட்டாத்தியாயி (பாணினீயம்) நிறைந்த தொல்காப்பியராக, கி. மு. மூன்றாம் நூற்றாண்டினரென்று யாதொரு சான்று மின்றிக் குறித்தும், வடவெழுத்தைத் தமிழெழுத் தென்றும் தமிழெழுத்தை வட வெழுத் தென்றும் மயங்கியும், அயன்மொழிச் சொற்களைத் தமிழெழுத்தொடு புணர்க்காது அயன்மொழி யெழுத்தொடு புணர்த்தும், தமிழிலக்கணங் கல்லாதவரையும் தமிழ்ப்புலமை யில்லாதவரையும் தமிழதிகாரிகளாகக் காட்டியும், மொழிமுத லாகா எழுத்துக்களை மொழிமுதலாக்கியும், ஐயர் என்னும் சொல்வடிவை 'அய்யர்' என்று திரித்தும், மடக்கு, புதினம் என்னும் தென்சொற் கட்குத் தலைமாறாக யகமம், நாவல் என்னும் வேற்றுச் சொற்களை

ஆண்டும், தமிழிலக்கியம் செய்யுள் முதலியவற்றின் தோற்றத்தைப் பற்றித் தவறான கருத்துகளைப் புகுத்தியும், தமிழர்க்குச் சமற்கிருதக் கல்வியும் வேண்டுமென்று சொல்லாமற் சொல்லியும், தமிழின் தொன்மை, முன்மை, தாய்மை, தலைமை முதலிய தனிப்பண்புகள் அயலார்க்கு மட்டுமன்றிப் புலவரல்லாத தமிழர்க்குத் தெரியாவாறும்· இந்தித் திணிப்பிற்கும் திருக்கோவிற் சமற்கிருத வழிபாட்டு நிலைப் பிற்கும் வடவர் விருப்பிற்கும் தமிழ்ப்பகைவர் களிப்பிற்கும் ஏற்ற வாறும், "வேலிக்கு ஓணான் சான்று, ஓணானுக்கு வேலி சான்று" என்பதையொப்ப, பர். தெ. பொ. மீ. யின் முன்னுரையே கொண்டு ஏனையிந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட விருப்பதால்; தமிழ்கெடாவாறும் பொதுமக்கள் பணம் வீணாகாவாறும் இதை உடனே தடை செய்ய வேண்டு மென்றும்; மொழியாராச்சி, நடுநிலை, அஞ்சாமை, தன்னலமின்மை முதலிய பண்புகள் கொண்ட தமிழ்ப் புலவர் ஒருவர் எழுதும் உண்மையான தமிழிலக்கிய வரலாற்றையே. உலகெங்கும் பரப்ப வேண்டுமென்றும்; உ. த. க. கிளைகளும் மறைமலையடிகள் மன்றங்களும் திரு. வி. க. மன்றங்களும் தமிழ்க் கழகங்களும் தனிப்பட்ட தமிழ்ப் பற்றுளரும், தமிழக அரசு முதல் வர்க்கும் 'சாகித்திய அக்காதெமிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றி யனுப்புவதுடன், எனக்குந் தெரிவிப்பின் நன்றும்.

தமிழ்–ஆரியப் போராட்ட அரங்கு தமிழக மேடையினின்று உலக மேடைக்கு மாறவிருக்கின்றது. இந்நிலையில் தமிழுக்கு மாறான எல்லா நூல்களும் தக்கவாறு கண்ணோட்ட மின்றிக் கண்டனஞ் செய்யப்படு மென்பதை, வையாபுரிகளும் அவர் வழியினரும் அறிவாராக.




படித்துப் பயன் பெறுங்கள்!

புலவர் திரு. த. (சரவணத்) தமிழன் அவர்கள்

இயற்றிய இலக்கண நூல்

**தமிழ் நூல்**

(பாவும் உரையும்)

விலை : உருவா 4—00

கிடைக்குமிடம்:— இயற்றமிழ்ப் பயிற்றகம்,
நடவாகனத் தெரு,
திருவாரூர் (அஞ்சல்) தஞ்சை மாவட்டம்.

# புதிய ஃ

பர். வ. சு. ப. மாணிக்கனார்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்டி.,

தன் திரைப்படக் கோமாளித் தனத்தை அரசியலில் மட்டும் வைத்துக் கொள்ளாமல், மொழியியலிலும் புகுத்தத் துணிந்திருக்கும், 'துக்ளக்' ஆசிரியர் 'சோ'வின் பார்வைக்கு! (ஆர்.—)

புதிய ஆய்த ஒலியைப் பற்றிச் சொல்வதற்கு முன், பழைய ஆய்த ஒலிபற்றி ஓரளவு தெரிந்து கொள்ளுதல் நல்லது. தமிழொலிகளுள் ஆய்த ஒலி சிறப்பானது என்று சொல்வதற்கில்லை; ஆனால் சிக்கலானது. இவ்வொலிக்குத் தனிநிலை என்ற ஒரு பெயர் உண்டு. அப் பெயருக்குப் பொருத்தமாகவோ என்னவோ, இதன் ஆராய்ச்சியும் தனிச் சிறப்பு உடையதாக வளர்ந்து வருகின்றது.

1. ஆய்தம் பொருள் குறியாச் சார்பொலி என்பது ஒரு முடிவான கருத்து. சார்பொலி என்றால் அதற்கு ஒரு முதலொலி வேண்டும். குற்றியலிகரம் குற்றியலுகரம் என்பன இகர உகரங்களின் சார்பொலிகள் என்பது பெயரளவிலே வெளிப்படை. ஆய்தத்திற்கு எது முதலொலி? ஒரு முதலொலி என்றால், குறிப்பிட்டுச் சொல்லியிருப்பர் தொல்காப்பியர் ஆதலின் பல முதலொலி என்று கருதலாமா? குற்றியலிகரமும் குற்றியலுகரமும் குறுவொலியாக இருத்தலின், அதனோடு எண்ணப்படும் ஆய்தத்தினையும் குறுவொலி என்று கொள்ளலாமா? கொள்ள முடியாது என்பது என் கருத்து. மூன்றுமே மாத்திரைக் குறைவுடைய ஒலிகளாக இருப்பின், குறுவெழுத்து என்று பெயர் வைத்திருப்பாரேயன்றிச் சார்பெழுத்து என்று பெயர் வைத்திரார் தொல்காப்பியர். குறுவெழுத்தெல்லாம் சார்பெழுத்தாக இருக்கலாம்; சார்பெழுத்தெல்லாம் குறுவெழுத்தாக இருக்க வேண்டும் என்பதில்லை. மெய்யெழுத்துப்போல ஆய்தத்திற்கும் முழு அரை மாத்திரை உண்டு. மொழி மரபில் குற்றியலிகரம் குற்றியலுகரம் பற்றிய நூற்பாக்களில் அவை 'குறுகும்' என்று தெளிவாகக் கூறுகின்றது தொல்காப்பியம். ஆய்தத்துக்கு உரிய நூற்பாக்களில் குறுகும் என்ற குறிப்பே இல்லை. குறுக்கம் இருக்கலாம். குறுக்கம் இல்லாமலும் இருக்கலாம். தன்னைத் தனியே புலப்படுத்திக் கொள்ளமாட்டாது மொழியைச் சார்ந்து புலப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் இருத்தலின், இவை சார்பெழுத்து எனப் பெயர் பெற்றன.

குறுக்கம் வேறு. ஆய்தம் வேறு. குறுக்கம் என்பது உள்ளது குறைதல். தொல்காப்பியத்தின்படி ஆய்தம் என்றால் நலிவுடையது என்பது பொருள். நலிவாவது இரண்டிற்கு இடையே சுருங்குதல், இடுக்குப் படுதல், நசுக்குப் படுதல். "குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" குற்றெழுத்துக்கும் உயிர்மெய் வல்லெழுத்துக்கும் இடையில் மாட்டிக் கொண்டு ஆய்தம் நசுங்குகின்றது. இதற்குப் பொருண்மை இல்லா விட்டாலும் இஃது ஒரு வகையால் தனியொலியே; குறைவொலி யன்று. வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர்க் குற்றியலுகரங் களிலும் வேறாக ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகரம் என ஒன்றிருப்பதே சான்று. ஆய்தம் ஒன்றேயாக இருந்தும் தனக்கென ஒரு தொடர்மொழிக் குற்றியலுகரம் பெற்றிருக்கும் சிறப்பு நினையத் தகும். ஆய்த ஆராய்ச்சியும் சிறப்பும் எவ்வாறு இருப்பினும், அதன் இருப்பிடம் பன்னூறு ஆண்டுகளாக மாறாமல், நாலைந்து ஆண்டுக்கு முன் வரை ஒரு தன்மையாக இருந்து வந்தது. அதன் இருப்பிடம் என்ன? முன்னே குற்றெழுத்தும், நடுவில் ஆய்தமும் பின்னே உயிர் வல்லெழுத்துமாக அமைவது. எஃகு, அஃறிணை, வெஃகாமை, கஃசு பஃறுளியாறு என்ற சொற்களில் அதன் நிலையான இருப்பிடத்தைக் கண்டு கொள்ளலாம்.

2. இப்போது சில ஆண்டுகளாக ஆய்தம் புதிய ஒரு வழக்கைப் பெற்றுச் செய்தித்தாள்களிலும் அறிவியல் நூல்களிலும் வேகமாகப் பரவி வருகின்றது. இதனைப் பேச்சு வழக்கு என்று சொல்வதைக் காட்டிலும் எழுத்து வழக்கு என்று கூறலாம். இன்று எழுத்து வழக்குக்குப் பேச்சு வழக்கையும் ஆட்டி வைக்கும் ஆற்றல் உண்டு. இலட்சக்கணக்கான செய்தித் தாள்கள் நாளும் குவிகின்றன. ஒருநாள் ஒருவர் ஓரிடத்துச் செய்த எழுத்துவழக்கு விரைவில் பொது வழக்காக வழங்கப்படுகின்றது. ஆதலின் இன்று எழுத்து வழக்கிற் பெருகி வரும் ஆய்த வழக்கை ஆராய்வது நடைமுறை மொழி யியலாகும். சுருங்கச் சொல்லின் இன்றைய ஆய்தப் போக்கு வயிற்றுப் போக்குப் போல் இருக்கிறதேயன்றி ஒரெல்லையில் நிற்கும் வரம்புப் போக்காகத் தோன்றவில்லை. இப் படுநிலைமையைப் பின்வரும் பல்வேறு சொற்களால் தெளியலாம்.

கலைச்சொற்கள்

(அ) phanerogamea —ஃபெனரோகாமியா
phloem —ஃபுளோயம்
phenols —ஃபினால்கள்

| | |
|---|---|
| phycobilins | —ஃபைகோபைலின்கள் |
| phosphate | —ஃபாஸ்ஃபேட் |
| Fahrenheit's scale | —ஃபாரன்ஹீட் |
| Faraday | —ஃபாரடே |
| (ஆ) pteridophyta | —டெரிடோஃபைட்டா |
| sporophyte | —ஸ்போரோஃபைட் |
| conifer | —கோனிஃபர் |
| chloroform | —குளோரோஃபார்ம் |
| macrophyllous | —மைக்ரோஃபில்லஸ் |
| bloomfield | —புளூம் ஃபீல்டு |
| (இ) rendolph | —ரெண்டால்ஃப் |
| kirchoff | —கிர்க்காஃப் |
| schiff | —ஷிஃப |
| oscillograph | —ஆசிலோகிராஃப் |

மேற்காட்டிய சொற்களில் மூன்று புதுப்போக்குகள் உள. 'f' என்ற ஆங்கிலவொலி பட்டாங்கே தழுவப்படுகின்றது. அவ்வொலியை ஃ என்ற எழுத்து மட்டும் காட்டவில்லை 'ஃப்' என்ற தமிழ் ஈரெழுத்துக்கள் இணைந்து 'f' என்ற அயலொலியைக் குறிக்கின்றன. ஆய்த எழுத்தை உட்கொண்ட இவ்வொலி மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் வருவதை மேலைச் சொற்களில் காணலாம். மொழிக்கு முதலில் ஃபுளோயம் என்ற ஆய்தம் தொடங்குகின்றது. மொழிக்கு இறுதியில் கிர்க்காஃப் என்று பகர வொற்று முடிகின்றது. ஆய்தத் தொடக்கத்தையும் தமிழ்ச் சொற்களில் காண முடியாது. பகர வல்லொற்று ஈருவதையும் அச்சொற்களில் காண முடியாது. இங்ஙனம் இக்கலைச்சொற் கிளவிகள் தமிழ் அமைப்பின் முதலுக்கும் முடிவுக்கும் முரணுகத் தோன்றுகின்றன. ஆய்தம் வரும் வேறு சில கலைச் சொற்களைக் காண்போம்.

| | |
|---|---|
| (ஈ) inferae | —இன்ஃவிரே |
| raphia | —ரேஃவியா |
| cruciferae | —குருசிஃவிரே |
| euphorbiaceae | —யுஃவோர்பியேசி |
| sulphur | —சல்ஃபர் |
| nymphaeaceae | —நிம்ஃபயேசி |
| cycle phos phorylation | —சுழல் ஃபாஸ்ப் பாரிலேஷன் |

இங்கு முதலில் உள்ள மூன்று சொற்களில் 'f' ஒலிக்கு முன்போல் "ஃப்" வரவில்லை. "ஃவ்" என்ற இணைவு வந்துள்ளது. ஒரொலிக்கு ஈரெழுத்துக்கள் வருவது மட்டு மன்றி ஒருவகை ஈரெழுத்தில் வல்லெழுத்தும் இன்னொரு வகை ஈரெழுத்தில் இடையெழுத்தும் வருகை புரிகின்றன. ஆய்தத்துக்கு முன் குற்றெழுத்து வரும் என்ற அடிப்படை மரபுக்கு வேருக ரேஃவியா என நெடிலும், இன்ஃவிரே, சல்ஃபர், நிம்ஃப யேசி என னகர லகர மகர ஒற்றுக்களும் முன்னிற்கின்றன. பெரும் பாலும் தமிழ் எழுத்துக்களைப் போர்த்திக்கொண்டிருக்கும் இணைய கலைச் சொற்கள் உயிரற்ற உடம்புபோல் தோன்றுகின்றன; கண்களை எவற்றையோ வலிந்து காணச் செய்வது போல் உறுத்துகின்றன. செய்தித் தாள்களில் அடிபட்டு வரும் புதிய ஆய்த சொற்களில் சிலவற்றை இனி ஆராய்வோம்:

| | | |
|---|---|---|
| (உ) | fine | —ஃபையன் |
| | form | —ஃபாரம் |
| | coffee | —காஃபி |
| | flue | —ஃப்ளு |
| | of | —ஆஃப் |
| | nescafe | —நெஸ்கஃபே |
| | folksong | —ஃபோக் சாங் |
| | foreman | —ஃ போர்மென் |
| | self | —ஸெல்ஃப் |
| | friendly | —ஃபிரெண்டிலீ |
| | f or me | —ஃபார் மீ |
| | fish | —ஃபிஷ் |
| | frame | —ஃபிரேம் |
| | film | —ஃப்ல்ம் |
| | gun fight | —கன் (f) பைட் |

மேலோடாகப் பார்ப்பினும் இச் சொற்களில் பல மிகைகள் காணக் கிடைக்கும். இதுவரை நடைமுறையில் காப்பி, பாரம், புளுக்காய்ச்சல் என்று எழுதி வந்தவை ஆய்தம் பெறுகின்றன. தண்டனை, மீன், சட்டம், நாட்டுப்புறப் பாடல்கள், எனக்கு, தனது என்ற தமிழ்ச் சொற்கள் இருக்கவும் "f" ஒலியான அயல்மொழிச் சொற்கள் புகுத்தப் படுகின்றன. Gun fight என்ற ஆங்கிலத் திரைப்படத்தின் சுவரொட்டி அடைப்புக் குறிக்குள் "f" எழுத்தையே இடைமடுக்கக் காண்கின்றோம்.

**3.** மேற்காட்டிய ஐவகைக் கிளவிக் கூட்டத்திலிருந்து ஆய்த எழுத்து கலைச் சொற்களிலும் வழக்குச் சொற்களிலும் பண்பட்டவாறின்றிக் கண்டவாறு வந்து கொண்டிருப்பதை அறியலாம். இதன் மேல்விளைவை எண்ணிப் பார்ப்போம். தமிழுக்கு முன்னேற்றம் தருமா என்று சிந்திப்போம். ஃப் வ் என்ற எழுத்துக்கள் பன்னெடுங்காலமாக இன்னும் தமக்கென ஓர் ஒலியமைப்பைப் பெற்று வழங்குகின்றன. ஆதலின் "f" ஒலி வேண்டும் எனக் கருதும் எழுத்தாளர்கள் இம் மூன்று எழுத்துக்களின் மரபுநிலையைக் கெடுத்து, இணைத்து ஆளவேண்டாம். பொருளுடைய ஒவ்வோர் ஒலிக்கும் தனி வரி வடிவு தருவது தமிழியல். புத்தொலி வேண்டுமெனின் அதற்கென ஒரு புதிய எழுத்துக் கொள்ளுதலே தெளிவு. ஒலிக்கலப்பிற் பற்றுடையவர்கள் அக் கலப்பொலியை உள்ள தமிழ் எழுத்துக்களில் அடக்கித்தான் காட்டவேண்டும் என்ற பற்றுக் கொள்ள வேண்டியதில்லை. உயிருடைய குறியீடுகளைச் சிதைக்க வேண்டியதில்லை. இன்றைய போக்கினை நினைத்தால், இன்னும் சில நாட்களில் பின்வரும் தமிழ்ச்சொற்களைப் புதிய முறையில் மாணவர்கள் வாசித்தாலும் வியப்பில்லை.

| | | |
|---|---|---|
| (ஊ) | அஃறிணை | அfறிணை |
| | எஃகு | எfகு |
| | வெஃகாமை | வெfகாமை |
| | கஃசு | கfசு |
| | அஃகாமை | அfகாமை |

எழுத்தாளர்கள் சில தாம் விரும்பும் புதிய ஒலிகளுக்கு, ஜ, ஹ, ஸ, க்ஷ போன்ற தனி வரி வடிவங்கள் ஆண்டு வருவதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். இவ்வடிவங்கள் தமிழ் எழுத்துக்களோடு கலந்து ஜைனர், ஹிப்பி, ஸெல், க்ஷய ரோகம் எனச் சொற்பாங்கு பெறுகின்றன. இதுவொப்ப, 'f' ஒலி வேண்டுவோர் அவ்வடிவையும் அப்படியே தழுவிக் கொண்டு பின்வருமாறு எழுதலாமே.

| | | |
|---|---|---|
| (எ) | fine | fைன் |
| | form | fாரம் |
| | flue | fளு |
| | folk song | fோக் சாங் |
| | for me | fார் மீ |
| | fish | fிஷ் |

இந்நிலையில் ஒலி மாற்றம் எவ்வளவு தெளிவாகத் தெரியும். மொழிக்கு உயிரான ஒலித் தூய்மையே மாறும்போது காலந்தோறும் சிதையும் வெற்றுடம்பு மாறினால் என்ன? தலையே மாறுகையில் தொப்பி மாற்றம் ஒரு கேடாகாது. "வேற்று விகார விடக் குடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்" என்ற திருவாசகப்படி அயலொலியைத் தமிழ் வடிவில் எழுதி ஈழகையும கெடுக்க வேண்டாம்.

4. புதிய ஒலியைச் சேர்ப்பதனால், பண்பட்ட ஒரு மொழிக்கும் தீய பண்பு பல புகுந்து விடும்; புதிய சொல்லாக்கம் குறையும்; தடைப்படும்; பழைய சொற்கள் திரிபுபடும்; சொற்பார்வை கண்ணுறுத்தும். எம்மொழியும் உலக ஒலியனைத்தும் உடையதாய் இருப்பதில்லை. உடையதாக ஆக்கின் அம்மொழி கண்காட்சி மொழியாக விளங்குமேயன்றி வாய்மொழியாக வழங்காது. உலகமெங்கும் பரவிய ஆங்கில மொழியை நம்மளவில் நோக்கினும் இவ்வுண்மை பெரிய வெழுத்து அரிச்சுவடிபோல் விளங்கும். ழ ள ண ற என்ற தமிழ் மெய்யொலிகள் ஆங்கிலத்தில் இல்லை. அழகப்பன், வள்ளுவர், அண்ணாமலை, மறைமலையடிகள், சோழன், பாண்டியன், திருக்குறள், சேக்கிழார், பழநி, ஆடுதுறை, பிள்ளை, விழுப்புரம், வண்டலூர், பண்ணுருட்டி, கொள்ளிடம், சீர்காழி, குற்றாலம், திருவெறும்பூர் முதலிய ஆட்பெயர், ஊர்ப்பெயர்ச் சொற்களை நம் நாட்டு ஆங்கில இதழ்களே எப்படி எழுதுகின்றன? ஒலி கலந்தோ எழுத்துக் கலந்தோ அச்சிடுகின்றனவா? பின்வருமாறு எழுதிப் பார்த்தால் அழகு புலப்படும்.

(எ) அழகப்பன் —Aழakappan
வள்ளுவர் —Vaள்ளuvar
மறைமலை —Maறaimalai
திருக்குறள் —Tirukkறaள்
பாண்டியன் —Paண்tiyan
அண்ணாமலை—Aண்ண்amalai

இவ்வாறு நம் ஆங்கிலத் தாள்களும் ஆங்கில எழுத்தாளர்களும் தமிழுக்கே சிறப்பொலியுடைய சொற்களை ஒலி கலந்தும் வடிவு கலந்தும் எழுதினால் அக்காட்சி

கண்ணையும், கருத்தையும் இன்புறுத்துமா? துன்புறுத்துமா?

5. தமிழ்த்தாய் என்ன கேட்கின்றாள்? தமிழ் மகன் அயல் மொழிக்குக் காட்டும் மொழி நேர்மையைத் தனக்கும் காட்டுமாறு மன்றாடுகின்றாள்; வளர்ந்த அயல்மொழியில் காக்கத் துடிக்கும் மொழி யமைப்பை வளரும் தன்மொழியிலும் காத்துக் கொள்ளுமாறு பணிக்கின்றாள். ஒலிப்பெருக்கம் வளர்ச்சியாகாது. ஒலி பல்கிய இந்திய மொழிகள் எவ்வளவோ உளவே; வளர்ந்துள்ளனவா? வளர்ச்சிக்கு நூற்பெருக்கமும், கல்விப் பெருக்கமும் சிந்தனைப் பெருக்கமும் இவற்றையெல்லாம் நன்கு மதிக்கும் மக்கட் பெருக்கமும் அரசர் சார்புமே தேவை.

தமிழ் மொழியின் நீண்ட வரலாற்றைக் கூர்ந்து அறிந்தவர்கள் அயல் ஒலியை எவ்வளவு வற்புறுத்தித் திணிப்பினும் தமிழ் ஏற்றுக் கொள்வதுபோல் காட்டித் தள்ளிவிடுவதை அறிவர். வாயுட் புகுந்து ஒட்டிய ஒரு சிறு வெற்றுப் பொருளையும் நா வளைத்துத் துளைத்து உராய்ந்து எட்படியும் வெளியேற்றுவதுபோல, தமிழும் சிலர் செய்யுட்களில் சிலர் உரைநடைகளில் அவ்வப்போது புகுந்த வேற்றொலிகளைக் காலப் போக்கில் ஒதுக்கி விட்டுவிடக் காண கின்றோம். இவ்வுண்மையை அறிந்த பவணந்தியார் வடசொற்கள் பல வாய்க்கால் வழிவந்த இடைக்காலத்து அந்த வடவொலிகள் இன்னின்னவாறு தமிழ்மை பெறவேண்டும் என்று விரிவிலக்கணம் செய்தார். வீரமாமுனிவர் தமிழ்த்தோற்றம் பெற்று வாழ்ந்தது போல வடசொற்கள் தமிழுக்கு வரும் போது தம்முருவத்தை அகற்றிக் கொண்டு முழுத் தமிழுருவம் பெற்றன. அதனால் அச்சொற்கள் ஓராற்றால் நிலை பேறு எய்தின. வடவிலக்கணங்களைப் பெரிதும் தழுவிய வீரசோழியப் புத்தமித்தரனாரும் தமிழின் ஒலியமைப்புக்கு ஊறு செய்தாரில்லை. நாயன்மார்கள், ஆழ்வார்கள், கம்பர், வில்லி புத்தூரார், பரஞ்சோதியார் என்ற பெரு மக்கள் எல்லாரும் தமிழ்மை குன்றாத பாடல்கள் ஆயிரமாயிரம் எழுதினர்.

வேண்டும் சொல்லாக்கங்கள் படைத்த பின்னும், பெயர் வகையிலோ பிறவகையாலோ வேற்றுச் சொற்களை ஓரளவு தழுவிக் கொள்ளலாம். இது வழிவழி வந்த தமிழ் மரபே. அங்ஙனம் வரும் சில கிளவிகள் தம் அயன்மையை விட்டுத் தமிழ்மை பெற்று

ஒன்றிவிட வேண்டும் என்பதும் ஒரு பெருந் தமிழ்மரபு. ஒட்டாச் சொற்களால் ஆயகட்டுரைகளும் செய்யுள்களும் நூல்களும் தமிழியற்கைக்குப் புறம்பானவை ஆதலின் அவை ஒரு குறிப்பிட்ட காலத்தளவு கூட நிலைநில்லா என்பதனை நல்ல எழுத்தாளப் பெருமக்கள் மனங்கொளள வேண்டும். விரைந்துவரும் புதிய ஆய்தப் போக்கை நினைப்பின் அதற்கு நெடும் பிடிப்பு இல்லை. சின்னாளில் பல்பிணியுற்று மறைந்துவிடப் போகின்றது.

"வந்தவாறு எங்ஙனே போமாறு ஏதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையிர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்"

என்பது நாவுக்கரசர் பொதுவாக்கு. ஆதலின் எழுத்தாளர்களும் செய்தித் தாளாளர்களும் தங்கள் புதிய கருத்துக்களைத் தமிழின் நிலையான ஒலிகளைத் தழுவியும் நிலையான மரபுகளைத் தழுவியும் எழுதுவார்களாக. புதிய ஆய்தப் போக்கைக் கைவிடுவார்களாக. வேண்டுமேல், பிரான்சு, பாரம், புளு, பிலிம், பிலியோசா என்று வந்த ஒரு மரபுப்படியாவது எழுதுவார்கள் எனவும் மொழி நேர்மையைத் தமிழன்னைக்கும் போற்றித் தருவார்கள் எனவும் எதிர்நோக்குகிறேன்.

தமிழ் எழுத்தில் எழுதிவிடுவதால் எதுவும் தமிழாகிவிடாது. தமிழ் என்பது வெறும் எழுத்துக்கூட்டம் அன்று. தமிழ் என்பது மொழி. மொழி என்பது ஒலியிலும் ஒலித் தொடரிலும் சொல்லிலும சொற்றொடரிலும் நிலையான ஒழுங்குகள் அமைந்தது. மொழிநலமும் மொழிக்கேடும் பளிச்செனத் தெரிய வேண்டுமானால் கொஞ்ச நாளைக்கு ஒன்று செய்து பார்க்கலாமே! செய்தித்தாள்களும் எழுத்தாளர்களும் ஆங்கிலத்தைக் கலக்கும்போது, ஒன்று வேண்டுகின்றேன். அந்த அயற்சொற்களை ஆங்கில எழுத்துக்களிலேயே அப்படியப்படி எழுதிவிடுங்கள், அச்சிடுங்கள். ஆங்கிலக் கலப்பு எவ்வளவு விழுக்காடு என்று படிக்கும் கண்களுக்குத் தெற்றென வெளிப்படும். எழுதிய மொழி தமிழா? ஆங்கிலமா? அச்சிட்ட இதழோ, விளம்பரமோ ஆங்கிலமா? தமிழா? என்பவையெல்லாம் வெட்ட வெளிச்சமாகக் கண்படும். நல்ல தமிழுக்கு வழிபிறக்கும். O

---

நீங்கள் ஓர், உ. த. க. உறுப்பினரா ?
இல்லெனில் இன்றே உறுப்பினராகுங்கள்.

தொடர்புக்கு:
பொதுச் செயலர். உ.த.க. வலம்புரி இல்லம், மதுரை-10

# 'தென்மொழி'க்கு நன்கொடை.

8-6-71 முதல் 15-11-71 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

| | உருபா |
|---|---|
| திரு. அரணமுறுவல், நயினூர் பாளையம் | 25-00 |
| திரு. எம். துரைசாமி | 2-00 |
| திரு. ப. நன்மாறன், அமரப்பூண்டி | 5-00 |
| மன்றமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி | 6-00 |
| திரு. ஆ. தங்கச்சாமி, மேலவரகுணராமபுரம் | 8-00 |
| திரு. க. நாராயணன், பெரும்பகல்லா | 10-00 |
| புலவர் கே. சுப்பிரமணியம், பல்லடம் | 5-00 |
| திருவாளன்மார் பெ. புதுமைப்பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு, சின்னத்தம்பி | 100-00 |
| திரு. வேளாங்கண்ணி | 1-00 |
| திருவாளன்மார் பெ. புதுமைப்பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு, சின்னத்தம்பி | 50-00 |
| மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி | 3-00 |
| திரு. சி. பெரியசாமி, திருமலர் கல்லூரி, பூண்டி | 2-49 |
| புலவர் திருமேனி நாகராசன், காரைக்கால் | 20-00 |
| திரு. காரை. அறவாழி, காரைக்கால் | 00-00 |
| திரு. ப. தனஞ்சயன், சென்னை | 2-00 |
| புலவர் சேயிளங்கண்ணன், அமரப்பூண்டி | 1-00 |
| மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி | 4-00 |
| திரு. பரணன் | 39-50 |
| திரு. ஏ. பி. நரசிம்மன், பெங்களூர் (உண்டியல் வழித் திரட்டியது) | 6-00 |
| திரு. மெ. கி. சுந்தரமூர்த்தி, சாத்தனூர் (முகவை) | 1-00 |
| திரு. மு. இராமலிங்கம், தொழுதூர் | 2-00 |
| திரு. சி. முத்துச்சாமி, சமீன் ஊத்துக்குளி | 1-00 |
| திரு. க. நாராயணன் பெரும்பகல்லா | 8-00 |
| திரு. வி. க. இல்லம், வெள்ளோட்டாம் பரப்பு | 3-00 |
| மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி | 6-00 |
| திரு. அ. பொன்னையன், தொட்டியம் | 5-00 |
| திரு. தொ. செ. கந்தசாமி, தொட்டியபட்டி | 10-00 |
| திரு. நா. தண்டபாணி, அத்தியந்தல் | 5-00 |
| புலவர் எசு. ஆர். கந்தசாமி, சமுத்திரம் [சேலம்] | 1-00 |

[தொடரும்]

# செய்திகள்

*1. கனிமொழி நீடுழி வாழி!*

நெடுநாளைய தென்மொழி அன்பர் பச்சளநாய்க்கன்பட்டி (மதுரை மா.வ.) புலவர் திரு. **பூ. அரங்கசாமி**-திருவாட்டி **இரஞ்சிதம்** ஆகியோருக்கு 20—6—73 அன்று பெண்மகவு பிறந்து அதற்குக் **கனிமொழி** என்று பெயரிட்டு அதன் நினைவாகத் தென்மொழிக்கு உரு: **5-00** நன்கொடையாக அனுப்பியுள்ளனர். அவர்தமக்கு நன்றி கூறிச் செல்வி **கனிமொழி** நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

*2. அறவாணன் நீடுழி வாழி!*

நெடுநாளைய தென்மொழி அன்பர் நெய்வேலி திரு. **வ. இறையொளி**-திருவாட்டி **பூவரசி** ஆகியோருக்கு 25-6-73 அன்று ஆண்மகவு பிறந்து அதற்கு **அறவாணன்** என்ற பெயர் சூட்டித் தென்மொழியின் வளர்ச்சிக்கு அதன் நினைவாக உரு: **5-00** நன்கொடை விடுத்துள்ளனர். அன்னார்க்கு நன்றி தெரிவித்துச் செல்வன் **அறவாணன்** நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

*3. அறிவுக்கனல் நீடுழி வாழி!*

நெடு நாளைய தென்மொழி அன்பர்கள் நெய்வேலி திருவளர். **அன்புவாணன்**-**வெற்றிச்செல்வி** இருவருக்கும் 8-7-73 அன்று ஆண்மகவு பிறந்தது. அதற்கு **அறிவுக்கனல்** என்னும் பெயர் வைத்து அதன் நினைவாகத் தென்மொழிக்கு உரு: **10-00** நன்கொடையாகத் தந்துள்ளனர். அவர்தமக்கு நன்றி கூறிச் செல்வன் **அறிவுக்கனல்** நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

**4. புன்செய்ப் புளியம்பட்டி-அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா:**

கடந்த மடங்கல் முதல்நாள் (17—8—73) அன்று மாலை **2-30**மணியளவில் மேற்படி பள்ளி இலக்கிய மன்றத் தொடக்க விழா சத்தியமங்கலம் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. **சீ வேங்கடசுப்பிரமணியம்** அவர்கள் தலைமையில் நடந்தது. அச்சமையம் தென்மொழி ஆசிரியர் திரு. **பெருஞ்சித்திரனார்** அவர்கள் **'இளைஞர்க்கான இன்றமிழ்'** என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். பள்ளித்தலைமையாசிரியர் அனைவரையும் அன்புடன் வரவேற்று உரை நிகழ்த்தினார். விழா மாலை 5-00 மணியளவில் இனிது நிறைவுற்றது.

**5. புன்செய்ப் புளியம்பட்டி-பேரூராட்சி மன்றம் பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வரவேற்பு:**

தென்மொழி ஆசிரியர், பாவலரேறு திரு. **பெருஞ்சித்திரனார்** அவர்கள் புன்செய்ப் புளியம்பட்டிக்குச் சென்றிருந்த பொழுது, அங்குள்ள பேரூராட்சி மன்றத்தார், ஆசிரியவர்களுக்குச் சிறந்த ஒரு வரவேற்பு அளித்துப் பாராட்டினர். பேரூராட்சி மன்றம் ஒன்று

பாவலர் அவர்களுக்கு வரவேற்பளித்துப் பாராட்டுவது இதுவே முதல் முறையாகும். வரலாற்றுச் சிறப்புடைய வகையில் அம்மன்றம் அளித்த பாராட்டும், அதுகொடுத்த மிகப்பெரிய வாழ்த்திதழும் தமிழுக்கே அளித்த பெருமையாகும். கோவை மாவட்ட விடுதலை இயக்க அமைப்பாளர் திரு. மறை. நித்தலின்பனுர் அவர்கள் வரவேற்பு விழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினுர். பேருராட்சி மன்றத் தலைவர் திரு பு. கா. ஆறுமுகம் அவர்கள் பாவலர் அவர்களை வரவேற்று அவர் செய்துவரும் தனித்தமிழ்த் தொண்டையும், நாட்டு விடுதலைப் போராட்ட முயற்சிகளையும் மிகவும் பாராட்டினுர். பேருராட்சித் துணைத்தலைவர் திரு. ந. நஞ்சுண்டசாமி அவர்கள் வரவேற்பிதழ் வாசித்துக் கொடுத்தார். பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பாவலரவர்கள் நீண்டதோர் அரிய சொற்பொழிவாற்றினுர். மன்ற உறுப்பினர் திரு. பு. பெ. கந்தவேள் அவர்கள் நன்றி நவில, கூட்டம் மாலை 7-30 மணியளவில் முடிவுற்றது.

6. திரு. வி. க. வின் 90-ஆவது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்-புன்செய்ப் புளியப்பட்டி:

17—8—73 இரவு 9 மணியளவில் புன்செய்ப் புளியம்பட்டி திரு. வி. க. மன்றத்தார், திரு வி. க.வின் 90-ஆவது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் வகையில், அவ்வூர் திரு. வி. க. திடலில் ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். கூட்டத்திற்கு விடுதலை மறவர் திரு. நித்தலின்பனுர் தலைமை தாங்கினுர். கூட்டததில் புலவர். திரு. இளமுருகன், புலவர் திரு. துரைச்சாமி முதலியோர் பேசினர். இறுதியாகப் பாவலர் பெருஞ்சித்திரனுர் அவர்கள் தமிழின இழிவு நீக்கம் பற்றி அரியதொரு சொற்பெருக்காற்றினுர். கூட்டம் இரவு 11 மணியளவில் முடிந்தது.

7. பல்லடம் அரசினர் உயர் நிலைப்பள்ளி இலக்கிய மன்ற விழா.

18—8—73 அன்று பகல் 3 மணியளவில பல்லடம் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா, பள்ளித் தலைமையாசிரியர் தலைமையில் கொண்டாடப் பெற்றது. அவ்வமையம் பேரா. கணபதி அவர்களும பாவலர் பெருஞ்சித்திரனுர் அவர்களும் விழாவில் பங்கேற்று அரிய சொற்பொழிவாற்றினுர்கள்.

8. நீலமலை மாவட்டம் கெத்தை, பரளி ஆகிய இரண்டு இடங்களிலும் தமிழின இழிவு நீக்கச் சிறப்புக் கூட்டங்கள்:

19—8—73 ஞாயிறு அன்று மாலை 7 மணிக்குப பெரும்பகல்லா (கெத்தை)க் குடியிருப்பிலும், 20—8—73 அன்று இரவு 8-மணியளவில் பரளி மின்நிலையக் குடியிருப்பிலும் தமிழின இழிவு நீக்கச் சிறப்புக் கூட்டங்கள் நடைபெற்றன. இரண்டு கூட்டங்களுக்கும் திரு. நித்தலின்பனுர் தலைமையேற்ருர். இரு கூட்டங்களிலும் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் சிறப்புரைகள் ஆற்றினுர், கூட்டங்கள் இரண்டும் பெரும்பகல்லா விடுதலை மறவர் திரு. இளமாறன் அவர்களால் ஏற்பாடு செய்யப் பெற்றன.

படையச் செயல் வேண்டும். செயல் மறந்து நெளியும் இவனுக்குப் புயலின் வேகத்தைப் புகட்டல் வேண்டும். பூனைக்கு நடுங்கும் கோழையாகிய இவனைப் புலி வேட்டைக்குத் தூத்தல் வேண்டும்'' என்ற தங்களின் வீர உரை என் நெஞ்சில் பளிச்சென மின்னலிட்டது. அதைச் செய்யும் செயல்மறவர் ஒருவர் உளரேல் அது தங்களையன்றி வேறு யார்? 15-4-73 அன்று கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் படிக்கப் பெற்ற கட்டுரை கட்டுரையே அன்று! தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் (சொல்லிக் கொள்ளாதவற்றைப் பற்றிக் கவலையில்லை) தமிழன் ஒவ்வொருவனும் படித்துப் பயன் பெற்று-மொழித்தூய்மை காத்திட-நெஞ்சப் பேழையுள் வைத்துப் பூட்டப்பட வேண்டிய பொன்னேடு. கருத்தரங்கத் தலைவரின் பாராட்டு மிக உயர்ந்தது. எனினும் அதைவிட இன்னும் ஒருபடி மேலாகவே என் நெஞ்சு கணிக்கின்றது. தென்மொழியன்பர்களுக்குத் தாங்கள் தந்துள்ள நற்செய்தி தங்களை நேரில் சந்தித்து நெக்குருக உரையாடி இயன்றளவு துணைநிற்கத் துடிக்கும் என்போன்ற இளநெஞ்சங் களுக்குப் பெருவிருந்து. சென்னை வரும் பொழுது ஒருநாள் எம் இல்லத்திற்கும் வருகை தந்து எங்கள் நண்பர்கள் கழக உறுப்பினர் களுடன் கலந்துரையாடி எங்கட்கு ஊக்கம் அளித்திட அன்புடன் அழைக்கின்றோம். இலக்கிய வட்டங்கள் அமைப்பதும் இயன்றால் இளம் பாவலர்களுக்குப் பயிற்சியளிப்பது என்பதுபற்றியும் தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். அது நல்ல திட்டம். தமிழன் உடலில் புகுந்த நஞ்சு உள்ளத்திற்குச் செல்லுமுன் தடைசெய்ய அமைக்கப்படும் படைக்கலனாகும். அதை நாங்கள் வரவேற்கின்றோம். நீங்கள் இங்கு வரவேண்டும் என உரிமையுடன் மீண்டும் அழைத்து மடலை முடிக்கி றேன். தங்களின்பால் ஈர்க்கப்பட்ட இளந்தமிழன்,

—பெ. பூங்குன்றன்,

நுண்கதிர் (புதிர்க்கதிர்) இயக்குநர்; சென்னை-3.

**0: 374:** இது நான் தங்களுக்கு எழுதும் இரண்டாவது மடல். முதல் மடலில் நான் தெரிவித்திருந்த சில செய்திகளை உடனே செயலுக்குக் கொண்டு வந்திருப்பது குறித்து எனது மகிழ்ச்சி. என் மடலைப் படித்த பிறகு நீங்கள் இவ்வாறு செய்திருக்க மாட்டீர்கள் என்பதை அறிவேன். அதற்கு முன்பே தாங்கள் இதுபற்றி எண்ணி யிருந்திருப்பீர்கள். தென்மொழி இதழ் அமைப்பு மாற்றம் குறித்துத் தான் குறிப்பிடுகிறேன். ஆனால் நான் தென்மொழி அதே அமைப்பில் வந்து கொண்டிருக்க, வேறோர் இதழை 'குமுதம்' போன்ற ஆரிய இதழ்களுக்கு எதிராகத் தொடங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந் தேன். நீங்கள் ''தென்மொழியையே' அந்த அமைப்பில் வெளியிடப் போவதாக அறிவித்துள்ளீர்கள். தென்மொழியின் அமைப்பை மாற்றுவது எனக்கென்னவோ பிடிக்கவில்லை. ஆசிரியவுரை, அட்டைப்பாடல், நூற்சிரியம் போன்றவற்றைப் புதிய வெளியீட்டில் இழக்க நேரிடுமோ என அச்சமாகவுள்ளது. நடப்பு நிகழ்ச்சிகளால் சோர்ந்து அமைந்துவிடும் எங்களுக்கு, திங்கள் ஒருமுறை மீண்டும் புதிய உணர்வினைத் தந்து செயலுக்குத் தூண்டுவது ஆசிரியவுரை ஒன்றே! தளர்ந்துவிடும் நரம்புகளுக்கு முறுக்கேற்றுவது அதுவே! தென்மொழி வெளிவந்தால்தான் எந்தக் கருத்தினையும் தெரிவிக்க முடியும். ஆனாலும் நான் முதன் மடலில் வலியுறுத்திய கருத்தை இங்கும் தெளிவுறுத்த விரும்புகிறேன். தென்மொழி ஆசிரியவுரை யுடனும், விடுதலைக் கருத்துக்களுடனும் ஆனால் கதைகள்,

துணுக்குகளை நிறையக் கொண்டதாகவும் வெளிவந்தால் எந்த வகைப் பலனையும் ஏற்படுத்தாது. விடுதலைக் கருத்தைத் தாங்கி வரும் எந்த இதழும் தமிழர்களால் அச்சக் கண்ணோட்டத்துடனேயே பார்க்கப்படும். பளபளப்பான அட்டையுடனும் கதை, துணுக்கு களுடனும் வெளியிடுவதால் மட்டும் இந்தத் தமிழர்கள் அதை வாங்கிப் படித்துவிட மாட்டார்கள். நீங்கள் எதிர்பார்க்கின்ற விற்பனையும் பொருகாது; குமுதம் போன்ற இதழ்களுக்கு எதிராகச் செயல்படவும் முடியாது. தென்மொழி எப்பொழுதும் போல் "எங்களைப் போன்றோருக்காகவே" வந்து கொண்டிருக்கட்டும். இனவுணர்வும், மொழியுணர்வும் உள்ளோர் கையில் அது திகழ்ந்து மேலும் அவர்கள் இனவுணர்வை வளர்க்கப் பயன்படட்டும். இனவுணர்வு அற்று 'இந்தியங்களாகி' விட்ட தமிழர்களுக்கு வேறு வகையில் மருந்து அளிக்க வேண்டும் அஃதாவது வெளிப்படையான கருத்து விளம்பரம் அற்ற ஓர் இதழை நாம் தொடங்க வேண்டும். இன மொழி யுணர்வுகள் மறைமுகமாகத் திணிக்கப்பட வேண்டும். கல்கி, தினமணிக்கதிர் போன்ற இதழ்களை வெளிப்படைகளாகப் பார்ப்போருக்கு எந்த வகையில் ஆரிய நச்சுக் கருத்துகள் அவற்றில் திணிக்கப்பட்டுள்ளன என்பது தெரியுமா? ஆனாலும் படிப்போர் நெஞ்சில் அவர்களை யறியாமல் அவை சென்று படிந்து விடுகின்றன. இப்படித்தானே நம்மவர்களை அடிமைக் குழியில் தள்ளி விட்டுள்ளார்கள். நம்மவர்களை அதே வழியைப் பின்பற்றி அவ வடிமைக்குழியிலிருந்து மீட்க வேண்டும். எண்ணிச் செயல்படுக!

—வீ.செ. வேலிறையன்.

வெள்ளவெளிப்புதூர், தாராபுரம் (வட்)

**0: 375:** மாநாட்டிற்குப்பின் வந்த தென்மொழிபடித்தேன். உளத் துடிப்பால் சிலிர்த்துப் போனேன். தென்மொழி திருச்சிக்கு மாற்றப் படுவது எம்போல்வார்க்கு ஈடுசெய்யவொண்ணு பேரிழப்பும் பெருந் துன்பும் தருவதே; எனினும் நிறைந்த தமிழர்தம் பயன் கருதி இத் தமிழ்த் தரையின் நடுப்பகுதியில் தலைமையகமாம் தென்மொழி யிருப்பது சாலச் சிறந்ததே! மாநாட்டிற்கு முன்னுள் தென்மொழி யன்பர் கூட்டத்தில் தாங்கள் மலையம் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தென்மொழிக்கென பொருள் தொகுத்துத் திரும்ப எண்ணி யிருப்பதாகக் கூறினீர்கள். இத் தென்மொழியில் தென்னுடு சுற்றுச் செலவு பற்றியே உள்ளது. காணியம் அறியேன். என்னைப் பொறுத்த மட்டில் எங்கள் மேல் நம்பிக்கை வைத்து அருள்கனிந்து ஓரிலக்க உருபாவை எல்லையாக வைத்து பாவாணர் செ சொ. பி. திட்டம் போல் தென்மொழி விரிவாக்கத்திட்டத்தை எல்லார்க்கும் உரித் தாக்கும் ஒரு முயற்சியினை உடனடியாகச் செய்தருளுமாறு தாழ்மை யுடன் கேட்டுக் கொள்கின்றேன். தாய்த் தமிழகம் இவ்வகையில் தங்கட்கு கை கொடுக்காமற் போகாதென்பது திண்ணம். எதையும் எண்ணி ஆய்ந்து தெளிந்து தேரும் தங்கள் பேரறிவாண்மைக் கியைய இது குறித்து உடன் கருத்தறிவிக்குமாறு வேண்டு கின்றேன்.

—த. அரிமா வளங்கோ. புதுவை-1.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்,